www.padippakam.com

# நற்றமிழ்



தோள்கள் உடையவர்கள் ஒன்றுபடுங்கள்-புதுத்
தோற்றம் விழைபவர்கள் ஒன்றுபடுங்கள்

-அறிஞர் சாலை இளந்திரையனார்

ஆண்டு-ரு திங்கள்-அ தி.ஆ.உ0ஙசு கன்னி (புரட்டாசி) (15-9-2005)

ஆசிரியர் : புலவர் மு. இறைவிழியன்
இணையாசிரியர்கள் : புலவர் அரங்க. நடராசன், புலவர் செ. இராமலிங்கன்




வாழிய செந்தமிழ் வாழ்கநற் றமிழர்
வாழிய பாரத மணித்திரு நாடு.

-பாரதியார்

எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள தமிழர் ஒன்றாதல் கண்டே!

-பாவேந்தர்

இலக்கிய
இலக்கணத்
திங்களிதழ்

விலை
உரு 6.00

படிப்பகம்

www.padippakam.com



# சிறை நிரப்பும் போராட்டம்

உ0கூசு கன்னி ரு இல் (செத்தம்பர் 21) தமிழ்ப்பாதுகாப்பு இயக்கத்தின் சார்பில் தமிழ் மொழியின் வளர்ச்சிக்குரிய நடவடிக்கைகளை மாநில நடுவண் அரசுகள் மேற்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் சிறை நிரப்பும் போராட்டம் தமிழ்நாடு முழுதும் நடைபெற வுள்ளது.

1965 இல் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் வீழ்ந்த இந்திய தேசிய இயக்கங்கள் இன்றுவரை மீண்டும் ஆட்சிக்கு வரமுடியாமல் தடுமாறிக் கொண்டுள்ளன. பின்னர் ஆட்சிக்கு வந்த திராவிட இயக்கங்கள் படிப்படியாகத் தம் கொள்கைகளைக் கைவிட்டுப் பதவி நலம் பொருள் நலமே பெரிதென வாழ்ந்து வருகின்றன. தமிழ்மொழி அறவே தமிழ்நாட்டில் அழிக்கப்படும் நிலைக்குச் செல்லுகின்ற வகையில் எல்லா நிலையிலும் ஆங்கிலம் புகுத்தப்பட்டு வருதலைக் காணாமல் இருப்பதுடன அச்செயல்பாட்டிற்குப் பெரிதும் துணை புரிகின்றன.

2005 இல் நடைபெறும் சிறை நிரப்பும் போராட்டம் மேற்கண்ட ஏமாற்று அரசியலிலிருந்து மக்களை மீட்டுத் தமிழ்த் தேசியத்தைக் கட்டிக் காத்துத் தமிழும் தமிழரும் உரிமையுடன் வாழ வழி ஏற்படுத்தும் என நம்புகிறோம். எனவே இப்போராட்டத்தில் தமிழ் உணர்வாளர் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் எனக் கோருவதுடன் போராட்டம் சீரிய வெற்றி பெறவும் வாழ்த்துகிறோம்.

## பாவலர் கருமலைத் தமிழாழன் நூல்கள் பாராட்டுப் பெற்றன

பாவலர் கருமலைத் தமிழாழன் அவர்களின் வீணை மத்தளமாகிறது கவிதை நூல் 2000 ஆம் ஆண்டிற்கான சிறந்த நூலாகவும், மரபின் வேர்கள் கவிதைநூல் 2002 ஆம் ஆண்டிற்கான சிறந்த நூலாகவும் பாரத மாநில வங்கி தேர்ந்தெடுத்து 26-7-05 அன்று சென்னை கன்னிமரா நூலகக்கட்டட வளாகத்தில் நடைபெற்ற விழாவில் சிறப்புச்செய்தது. மெய்யறிவு திங்களிதழும் பகுத்தறிவாளர் இணையமும் இணைந்து 2004 ஆம் ஆண்டிற்கான சிறந்த நூலாகப் பாவலரின் **வேரின்** விழுதுகள் கவிதை நூலைத் தேர்ந்தெடுத்து 15-8-2005 அன்று சென்னையில் நடந்தவிழாவில் பாராட்டி விருது வழங்கின.

## கவிஞர் கல்லாடன் "திருக்குறள் உரைச் செம்மல்" என்னும் விருது பெற்றார்

புதுச்சேரிக் கலைமாமணி கவிஞர் கல்லாடன் அவர்கட்கு உலகத் திருக்குறள் மையம் 'திருக்குறள் உரைச்செம்மல்' என்னும் விருதை வழங்கியுள்ளது. விருது பெற்ற கவிஞரை நற்றமிழ் வாழ்த்துகிறது.

- ஆசிரியர்.

www.padippakam.com



# வளமான பாதையை நோக்கிப் புதுச்சேரி மாநிலம்

மாண்புமிகு முதலமைச்சர் **ந. அரங்கசாமி**

புதுச்சேரி மாநில மக்களுக்கு என் உளம் கனிந்த சுதந்திர தின வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

நமது பாரதநாட்டின் 58-ஆவது சுதந்திர தின விழாவை நாம் இன்று கொண்டாடுகிறோம். இந்தச் சுதந்திரத்தை நமக்கு வாங்கித்தந்த அண்ணல் மகாத்மா காந்தியடிகள் மற்றும் அவர் தலைமையில் விடுதலைப்போராட்டத்தை நடத்திய ஆயிரமாயிரம் விடுதலைப் போராட்ட வீரர்களை நாம் இத்தருணத்தில் நினைத்துப் பார்க்கக் கடன்பட்டிருக்கிறோம். அவர்கள் வாங்கித்தந்த சுதந்திரக் காற்றைத்தான் இன்று நாம் நிம்மதியாகச் சுவாசித்துக் கொண்டிருக்கிறோம்.

விடுதலை பெற்ற இந்தியாவின் முதல் பிரதமர் பண்டிதர் சவகர் லால் நேரு ஓர் அறிவியல் இந்தியாவை உருவாக்க விழைந்தார். அவர் காட்டிய வழியில் அன்னை இந்திராகாந்தி இந்தியாவை உலக அரங்கல் முன்னிறுத்தப் பாடுபட்டார். இளைய தலைவர் ராசீவ்காந்தி இருபத்தி யோராம் நூற்றாண்டு இந்தியாவை உருவாக்க தமது உழைப்பினை நல் கினார். நமது இந்தப் பாரதம் இன்று அன்னை சோனியாகாந்தியின் வழி காட்டுதலின் பேரில் மாண்புமிகு டாக்டர் மன்மோகன்சிங் அவர்கள் தலை மையில் உலக அரங்கில் தன்னிலையை உயர்த்திக் கொண்டிருக்கிறது.

வேளாண்துறையில் நமது மாநிலம் பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வேளாண்பெருமக்களின் வாழ்க்கையில் தன்னிறைவை ஏற்படுத்தியிருக்கிறது. மாநிலத்தின் அனைத்து கொம்யூன்களிலும் ஏற்படுத்தப்பட்ட உழவர் உதவியகங்கள் உழவர்களுக்கு உற்ற நண்ப னாக உதவுகின்றன. தரமான விதைகளை உழவர்களுக்கு வழங்க விதைச் சான்றளிப்பு முகவம் துணை செய்கிறது.

கால்நடைகள் ஒரு நாட்டின் சிறந்த செல்வம் என்பதை உணரும் இவ்வரசு கால்நடை வளர்ச்சியில் அதிக அக்கறை செலுத்தி வருகிறது. மாநிலம் முழுவதும் செயல்படும் கால்நடை மருந்தகங்கள் கால்நடைகளின் நோயை நீக்க உதவுகின்றன.

அலைகடல்மேல் வலைவீசித் தங்கள் வாழ்க்கையை நிலை நிறுத்திக்கொள்ளப் பாடுபடும் மீனவ நண்பர்கள் வாழ்வில் ஏற்றம் பெறச் செய்ய இந்த அரசு அவர்களுக்கு எல்லா உதவிகளையும் செய்து வருகிறது. மீன் பிடி தடைக் காலங்களில் அவர்களின் வாழ்வை நடத்தத் தேவையான அரிசியையும், பணத்தையும் இந்த அரசு தந்துதவுகிறது.

கூட்டுறவுக் கொள்கையில் அசையாத நம்பிக்கை கொண்டுள்ள எங்கள் அரசு கூட்டுறவுத் தத்துவத்தைப் புரிந்துகொண்டு அதற்குச் சிறப்பிடம் கொடுக்கிறது. வேளாண் கூட்டுறவுச் சங்கங்கள் வேளாண் கூட்டுறவு வங்கிகளாக உயர்த்தப்பட்டுள்ளன. கூட்டுறவு சுயசேவைப்

படிப்பகம்

www.padippakam.com



பிரிவு அங்காடிகள் பல்வேறு இடங்களில் தொடங்கப்பட்டுள்ளன. கூட்டுறவு வங்கிகள் மூலம் வேளாண் வளர்ச்சிக்கு நீண்ட கால, குறுகிய காலக் கடன்கள் விவசாயப் பெருமக்களுக்கு வழங்கப்படுகின்றன.

ஒரு மனிதன் வாழ்வை மேம்படுத்துவது கல்விச்செல்வமே. அச்செல்வத்தை எல்லா மாணவர்களும் தங்கு தடையின்றிப் பெற இவ்வரசு எல்லா நிலைகளிலும் முயன்று வருகிறது. இன்று நமது மாநிலத்தில் தொழிற்படிப்பைச் சார்ந்த கல்லூரிகள் இடம் பெற்றுள்ளன. குறிப்பாகப் பொறியியல் மற்றும் மருத்துவக் கல்லூரிகளில் பயில விரும்பும் மாணவர்கள் இப்போது வெளிமாநிலங்களுக்குச் செல்ல வேண்டிய நிலை வெகுவாகக் குறைந்துவிட்டது. விரைவில் அரசு சார்பில் ஒரு மருத்துவக் கல்லூரி தொடங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. அடுத்த கல்வியாண்டு முதல் இம்மருத்துவக்கல்லூரி செயல்படும்.

சமூக, பொருளாதார நிலைகளில் ஆதிதிராவிட மக்கள் நிலையை மென்மேலும் உயர்த்த இந்த அரசு எல்லா வகைகளிலும் உறுதுணையாக விளங்குகிறது. ஆதிதிராவிட மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் இந்த அரசு அதிக கவனம் செலுத்துகிறது. பல்வேறு மானியங்களையும் சலுகைகளையும் இவ்வரசு அளிப்பதன் மூலம் ஆதிதிராவிட மாணவர்கள் நன்கு கல்வி கற்றுச் சிறந்த குடிமக்களாக விளங்குவதற்கு ஏதுவாகிறது.

26-12-2004 அன்று ஏற்பட்ட சுனாமி பேரலைகள் புதுச்சேரி மற்றும் காரைக்கால் வாழ் மீனவ மக்களின் வாழ்க்கையில் பெரும் சோகத்தை ஏற்படுத்திவிட்டன. அவர்களின் உயிருக்கும் உடைமைக்கும் பெருத்த சேதம் ஏற்பட்டது. மாண்புமிகு மத்திய அமைச்சர்கள் மற்றும் அண்டை மாநிலங்களிலிருந்து மாண்புமிகு முதலமைச்சர்கள் மற்றும் அமைச்சர்கள் நமது மாநிலத்திற்கு வந்து நமக்கு ஆறுதலும் தேறுதலும் வழங்கினார்கள். நமது அரசு உடனடியாகப் பல்வேறு நிவாரணப் பணிகளை மேற்கொண்டதன் காரணமாக மீனவ மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்குக் கொண்டுவந்தோம். அவர்கள் தங்கள் தொழிலுக்குத் திரும்பப் படகு, வலை முதலான அனைத்து உபகரணங்களையும் வழங்கினோம். இப்போது அவர்கள் தங்கள் இயல்புநிலைக்குத் திரும்பி விட்டனர்.

இந்த அரசு உங்களால் உங்களுக்காக உருவாக்கப்பட்ட மக்களரசு. நீங்கள் இந்த அரசுக்குக் கொடுத்த ஒத்துழைப்பு மற்றும் ஆதரவு காரணமாகக் கடந்த நான்கு ஆண்டுகளுக்கும் மேலாகப் பல்வேறு செயல் திட்டங்களைச் சீரிய முறையிலும் சிறப்பான முறையிலும் ஆற்றிவந்துள்ளோம். மக்கள் தொண்டே மகேசன் தொண்டு எனும் இந்தப் பொன் மொழிக்கேற்ப பெருந்தலைவர் காமராசர் காட்டிய பாதையில் ஆட்சி நடத்தும் எங்கள் ஆட்சி மேன்மேலும் தொடர உங்கள் முழு ஒத்துழைப்பு தேவை. அந்த ஒத்துழைப்பையும் ஆதரவையும் எங்களுக்கு நீங்கள் தொடர்ந்து நல்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு நிறைவு செய்கிறேன்.

நன்றி! வணக்கம்

படிப்பகம்

www.padippakam.com



# நற்றமிழ் அறக்கட்டளையின் பரிசளிப்பு விழா



தி.ஆ. உ0ங.சூ, மடங்கல் கக் ஆம் நாள் (27-8-2005) புதுச்சேரி மூலைக்குளம் தாகுமாலா இல்லத்தில் முற்பகல் 10.30 மணி அளவில் புலவர் மு. இறைவிழியன் தலைமையில் நடந்தது. திரு. பெ. மூர்த்தி வரவேற்புரையாற்றினார். சொல்லாய்வறிஞர் ப. அருளியார், திரு குரு. பன்னீர்ச்செல்வம் ஆகியோர் மாணவரை வாழ்த்திப் பரிசுகளையும் வழங்கினர். விழாவிற்கு வந்திருந்த சான்றோர் பலரும் மாணவர்க்குப் பரிசளித்த நிகழ்வு சிறப்பாக இருந்தது. உயர்நிலைப்பள்ளியில் தமிழ் வழியில் படித்து முதலிடம் பெற்ற மாணவர்கள் 2 கிராம் தங்கப்பதக்கம், கேடயம், திருக்குறள் பெற்றனர். புலவர் சா. செல்வரத்தினம்மாள் நினைவுப்பரிசு - செல்வி செ. பத்மப்பிரியா, செல்வன் சா. செல்வமாறன் நினைவுப்பரிசு - செல்வன் தே. அருச்சுனன், செல்வன் இழெரால்து மாறன் நினைவுப்பரிசு - செல்வி இம்லவிசுமெகி துய்குளு, செல்வன் சில்வன் விசயன் நினைவுப்பரிசு - செல்வி த. மலர்க்கொடி, புலவர் மு. இறைவிழியன் ஊக்கப்பரிசு - செல்வி ப. கனிமொழி, திருமதி சா. அரியநாயகி ஊக்கப்பரிசு - உழவர்கரைத் தொடக்கப்பள்ளியில் 5 ஆம் நிலையில் முதலிடம் பெற்ற இருவர் பெற்றனர்.

முதல் மாணவர் : இர. விக்னேசு - உரு. 500/- கேடயம், திருக்குறள் இரண்டாம் மாணவர் : இரி. பெப்ரிசு அதோல்பு - உரு. 400/- கேடயம், திருக்குறள். விழாவின் இறுதியில் திரு. ச. செயராமன் நன்றியுரைத்தார். துணைத் தலைமையாசிரியர் சா. இளங்கோவன் தொகுப்புரை வழங்கினார். அனைவர்க்கும் பகல் விருந்து படைக்கப்பட்டது.

## சங்கமித்திராவின் நூல்கள் வெளியீடு

21-09-2005 இல் சென்னையில் பெரியார் தமிழ்ப் பேரவையின் சார்பில் பெரியார் பிறந்த நாள் விழாவும் சங்கமித்திராவின் There fore folks, it is a holy land, Sankamitra - Book - 1 - Sep. 2005 காலாண்டிதழ் ஆகிய ஆங்கில நூல்கள் வெளியீடும் நடைபெற உள்ளன.

தொடர்புக்கு : **திரு. சங்கமித்திரா**, ப. எண். 1/428
தென்பெரு நெடுஞ்சாலை, வண்டலூர் வாயில், சென்னை - 600 048

www.padippakam.com



# கருத்தரங்கம்

1. உரைசான்ற சான்றோர் ஒடுங்கி யுறைய
நிரையுள்ளார் அல்லார் நிமிர்ந்து பெருகல்
வரைதாழ் இலங்கருவி வெற்ப! அதுவே
சுரையாழ அம்மி மிதப்பு.

என்னும் பாழமொழிப் பாடல்,

சுரையாழ அம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை

என்னும் பாடலைக்கண்டு எழுதப்பட்டதாகலாம். 'சுரையாழ்' எனும் பாடல் மொழி மாற்றுப் பொருள்கோளுக்காக யாராலேயோ பாடப்பட்ட தாகும். அப்பாடல் பற்றிய என் கருத்து வருமாறு.

தோழி தலைவியிடம் தலைவனை 'இயற்பழித்தல்' நிலையில் கூறியதாகும் அப்பாடல். இயற்கைப் புணர்ச்சிப் பின்னர் ஒருவழித் தணந்த தலைவன் வாராமையால், தலைவி வருத்த முற்றபோது, தோழி, "கனாக் நாடான் சுனையைப் பற்றிச் சுரையாழவும் அம்மி மிதப்பவும் யானை நீந்தவும் முயல் நிற்கவும் ஆக மாறுபட்ட தன்மையுடைய தென்பர்; அப்படியே தலைவனும் 'பிரியேன்; பிரியின் தரியேன்' என்று கூறிப் போனவன், சூள் மறந்து மாறினான் என்றாள். இப்படிக் கூறுதலை 'இயற்பழித்தல்' என்பர் அகப் பொருள் நூலார்.

இதையே தலைவனை இயற்பட மொழிந்த தோழியிடம் தலைவி இயற்பழித்து மொழிந்ததாகவும் கொள்ளலாம்.

'சுரையாழ..... சுனை' எனும் வரிகள் கலித்தொகைப் பாடல்கள் போலும் ஒரு பாடலில் இடையில் வந்த வரிகளாகவும் கொள்ளலாம்.

எனவே 'சுரையாழ்' எனும் பாடலைப் பழமொழிப் பாடலுக்கேற் பவோ, மொழி மாற்றுப் பொருள்கோளுக்கேற்பவோ, இயற்பழித்தல் துறைக்கேற்பவோ பேசும் சூழலுக்கேற்றவாறு கொள்ளலாம்.

'உரைசான்ற' எனும் பாடற்கருத்தாகப் பின்வருவதைக் கொள்ளலாம்.

"நிமிரவேண்டிய சான்றோர் ஒடுங்குவதும் ஒடுங்கவேண்டிய நிரையுள்ளார். அல்லார் நிமிர்வதும் எதுபோன்றது எனின் சுரையாழ்வும் அம்மி மிதப்பும் போன்றதாம்". நடவாததை நடப்பதாகக் கூறுதல் இது. "அம்மியும் குழவியுமே காற்றில் பறக்கும்போது இலவம் பஞ்சு எனக்கென்னகதி என்றதாம்" - இது உலகப்பேச்சு. பொருத்திப் பார்க்க.

- ஆ. சிவலிங்கனார்,
மேனாள் மயிலம் தமிழ்க் கல்லூரி, முதல்வர்.

2. தி.வ.ஆ. 2036 மடங்கல் நற்றமிழ் இதழில் வினவிய பழமொழிப் பாடல் விளக்கம் பற்றிய பொருத்தமான பொருளைக் கீழ்க்கண்டவாறு இக்கட்டுரை கருத்தை நிறுவுகிறது.

www.padippakam.com



'உரைசான்ற' என்ற பழமொழிப் பாடலுக்குச் சான்றோர் கருவங் கொள்ளார் என்ற தலைப்பு - பொருத்தமாக இல்லை. காலத்தின் கோலம் என்பதாக அமைந்தால் சிறப்பாக இருக்கும் என்பது என் கருத்து.

'காலங் கெட்டுப் போச்சுங்க, எல்லாந்தலை கீழா நடக்குதுங்க, ஏன்னா - இது கலிகாலம் இல்லியா'

என்று உலகியலில் கூறக் கேட்பதன் சாயலைத்தான் இப்பாடல் பதிவு செய்து காட்டுகிறது.

அதாவது, நீரில் மிதக்க வேண்டிய சுரை அமுங்கவும் அமுங்க வேண்டிய அம்மி மிதக்கவுமாக இருந்தால் எப்படியோ அது போலக் கீழோர் செல்வச் செருக்குடன் வாழவும் சான்றோர் ஒடுங்கி வாழவுமான முரண்பாடுள்ள காலமாக இருக்கிறதே என்று ஏக்கத்தோடு கூறும் தொனியில் பாடல் அமைந்துள்ளது. இம்முரணான கருத்தை,

அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும். (169)

என்ற கருத்துடன் ஒருவாறு ஒப்பிட்டுணரலாம்.

முனைவர் திரு அ. ஆறுமுகம் அவர்கள் எழுதியுள்ளது போல, 'சான்றோர் வறுமையில் செம்மையாய் வாழ்பவர் என்பதால் பாடலுக்குள் கூறிய கருத்து பொருத்தம் இல்லை' என்பது சரியான முடிபன்று. ஏனெனில் கீழோர் செல்வச் செருக்குடன் வாழ்தல் உண்மையாக இருத்தல் போல் சான்றோர் வறுமையால் ஒடுங்கி வாழ்தலும் உண்மையே. அவர்கள் வறுமையைச் செம்மையாக ஆக்கிக் கொள்வதென்பது செயற்கையேயன்றி இயற்கை இல்லை. அவர்களது வறுமை வறுமையே!

எடுத்துக்காட்டாக மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை யவர்களின் வறுமை சொல்லொணாதது. மொழி ஞாயிறு பாவாணரின் புலமைக்குரிய வகையில் அவர் மேற்கொண்ட தமிழ்ப் பெரும் பணியால் அவர் நன்னிலையில் வைக்கப்பட்டிருந்தாரா? அவரே ஒரு முறை பேசும் போது, 'கையில் குடையுடன் நகரப் பேருந்தில் தள்ளுமுள்ளுக்கு ஆளாகித் தொடங்கித் துன்புற்று மொழிப்பணி செய்ய வேண்டியுள்ளது' என நொந்து கூறினார். யார் யாருக்கோ வண்டிவாகன வசதிகளைத் தந்த அரசு அளப்பரிய மொழிப்பணி செய்த மொழிஞாயிறு அவர்கட்குத் தனிச் சலுகையான விதிமுறையை ஏற்படுத்தி வசதிகளைச் செய்து கொடுத்திருந்தால் அகர முதலித் திட்டத்தை அவரே முழுமைப் படுத்தித் தமிழுக்கு வளம் சேர்த்திருப்பார் அல்லவா?

எனவே ஒன்றுமில்லாதவன் ஓகோ என்றிருக்க, சான்றாண்மை மிக்க உத்தமன் ஒடுங்கிக் கிடப்பதென்பது சாபக்கேடா? எனக் கூறுவது போன்ற பொருத்தத்தில் தான் மேற்படியான பழமொழிப் பாடலுக்கு விளக்கவுரை தரப்பட்டது. இதில் பிழை ஏதுமில்லை.

இப்பாடலை மொழிமாற்றுப் பொருள்கோளுக்குக் கூறும் 'சுரையாழ அம்மி மிதப்ப' என்ற சிந்தியல் வெண்பாப் பாடலோடு

www.padippakam.com



பொருத்திக் கூறக் கூடாது. தொல்காப்பியம் கூறும் உவமைவகையில் எதிர் நிரல் நிறையாகப் பொருள் கொள்ள வேண்டும்.

அடுக்கிய தோற்றம் விடுத்தல் பண்பே
நிரனிறுத் தமைத்தல் நிரனிறை சுண்ணம்
வரன்முறை வந்த மூன்றலங் கடையே. (38)

என்ற நூற்பாவின் உரையில் இளம்பூரணர் 'சுண்ணம் என்பது உவமையையும் பொருளையும் துணித்து ஒட்டுதல்' என்றார். இதற்கு,

களிறும் கந்தும் போல நளிகடற்
கூம்பும் கலனும் தோன்றும்

என்ற பாடலை எடுத்துக் காட்டி இதில் களிறு போலக் கலனும் கந்து போலக் கூம்பும் எதிர் நிரல் நிறையாகப் பொருந்தியுள்ளதாகக் கூறினார். இதேபோலத்தான் பழமொழிப் பாடலை எதிர்நிரல் நிறையாகப் பொருத்தி உணர வேண்டும்.

சுரையாழ அம்மி மிதப்ப என்ற பழமொழியை உவமையாகக் கொண்டு 'உரைசான்ற சான்றோர் ஒடுங்கி உறைய, நிரையுள்ளார் அல்லார் நிமிர்ந்து' என்பதை உவமேயமாகக் கொள்ள வேண்டும்.

உவமைக்கேற்ப உவமேயம் நிரல் நிறையாக அமையாமல் எதிர்நிரலாக உள்ளது. எவ்வாறெனில், சுரையாழ என்ற தொடக்கம் உவமேயத்தில் பின் கூறிய கீழோரின் செல்வச் செருக்கோடும், அம்மி மிதப்ப என்று இரண்டாவதாகக் கூறியதை உவமேயத்தில் முதலாவதாகக் கூறிய சான்றோர் ஒடுங்கி உறைதலோடும் பொருத்த வேண்டும்.

இங்ஙனம் உவமைக்கேற்ப உவமேயத்தை எதிர் நிரல் நிறையாகப் பொருத்தினால் இப்பாடலானது தொல்காப்பியர் கூறும் சுண்ண அடிப்படையிலான உவமையணி என்பது விளங்கும், ஈண்டு சுண்ணம் என்பதைப் பொருள் கோள் என்ற மொழிமாற்றாகக் கொள்ளக் கூடாது என்பதற்காகவே 'அதுவே' என்ற இப்பாடலின் ஒரு சொல் இப்பாடலை உவமையணியாகக் கருத வாய்ப்பைத் தருகிறது.

'சான்றோர் ஒடுங்கி வாழ, கீழோர் செல்வச் செருக்குடன் வாழ்வதானது எப்படி உள்ளதென்றால், அது சுரையாழ அம்மி மிதப்பது போன்றுள்ளது என்பது கருத்தாம். (அதுவே - ஏகாரம் அசை நிலை)

எனவே பழமொழிப் பாடலை மொழிமாற்றுப் பொருள்கோளான சிந்தியல் வெண்பாவோடு பொருத்தல் கூடாதென்றும் தொல்காப்பியர் கூறும் உவமைவகையில் சுண்ண வகையான எதிர் நிரல் நிறையணியாகக் கருத வேண்டும் என்றும் இக்கட்டுரை கருத்தை நிறைவுறுகிறது.

**- தமிழாகரர் தே. முருகசாமி,**
**மேனாள் காரைக்குடித் தமிழ்க்கல்லூரி முதல்வர்.**

## 3. பொய்கையாரும், பொய்கையாழ்வாரும்

எட்டாம் வகுப்புப் புதிய தமிழ்ப்பாடநூலில் "இன்னிலை" எனும் நூலிலிருந்து பாடல்கள் தரப்பட்டுள்ளன.

www.padippakam.com



அந்த நூல் பற்றிய ஆசிரியர் குறிப்பில் "இன்னிலை என்னும் நூலின் ஆசிரியர் ஆழ்வார் பன்னிருவருள் ஒருவராகிய பொய்கையார்" என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

இது பிழையான கருத்தாகும். பொய்கையார் என்பவர் வேறு; பொய்கையாழ்வார் என்பவர் வேறு. இருவரும் வெவ்வேறு காலத்தவர்.

- வளவ துரையன்

## ................... ஒரு தமிழ் நாளிதழ் ...................

தமிழ்மொழிப் பாதுகாப்பிற்காகவும் தமிழர் மேம்பாட்டிற்காகவும் ஒரு தமிழ் நாளிதழ் தொடங்குவதென்று புதுவையில் தி.ஆ. உ0௩௬, கடகம், 22, (7-8-2005) ஞாயிறன்று கூடிய தமிழ்ப் பற்றாளர் கூட்டத்தில் பின்வருமாறு முடிவு செய்யப்பட்டது.

நாளிதழ் தொடங்குவதற்காகும் பொருளீட்டலுக்காக உருபா.100/ (நூறு) மதிப்புள்ள பங்குகளை வெளியிடுவதென்றும், பங்கு எண்ணிக் கையின் சிற்றெல்லை 10 ஆகவும், பேரெல்லை 1000 ஆகவும் இருக்க வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

இதற்கான களப்பணிகளைச் செய்ய மூவர் கொண்ட அமைப்புக் குழு அமர்த்தப்பட்டது.

1. முனைவர் தமிழப்பன், சென்னை.
   தொ.பேசி : 044 - 55679635 கைப்பேசி : 9841395344
2. முவ. பரணன், திருச்சிராப்பள்ளி.
   தொ.பேசி : 0431 - 2513981 கைப்பேசி : 9443357398
3. இரா. செம்பியன், இராம்பாக்கம்.
   தொ.பேசி : 2699485

தொடர்புகளுக்கு

பாவலர் முவ. பரணன்
தமிழுருவி
பி-23, அதியமான் நகர், திருச்சிராப்பள்ளி - 620 013.
தொ.பேசி : 0431 - 2513981 கைப்பேசி : 9443357398

## தந்தை பெரியாரின் 127 ஆவது பிறந்தநாள்விழா 17-9-2005 இல் தாம்பரம் நகரில் நடைபெறும்.

புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்றத்தின் சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகளும் தமிழ் - தமிழர் நலம் நாடும் இதழ்களின் காட்சியும் இடம் பெறும். "சிந்தனையாளன்" ஆசிரியர் பெரியார் வே. ஆனைமுத்து பொறுப்பேற்று நடத்துகிறார்.

படிப்பகம்

www.padippakam.com



# பெருங்கதையும் சீவகசிந்தாமணியும்

கலைமாமணி நூற்கடல் **தி.வே. கோபாலய்யர்** (தொடர்ச்சி)

5. தளிர்களை உகிரால் கிள்ளிச் சிற்பத்தொழில் தோன்ற அமைத்தல்

சித்திரமாகச் செந்தளிர் வாங்கிப்
பத்திரச்சேதம் பற்பல கிள்ளியும் - பெருங். 2-14-30, 31

கொழுமடல் குமரி வாழைத் துகிற்சுருள் கொண்டுதோன்றச்
செழுமடற் காமவல்லி செருக்கயல் சிற்பமாகக்
கழுமணிச் செம்பொன் ஆழிக் கைவிரல் உகிரிற் கிள்ளி
விழுமுலைச் சூட்டி நின்றார் விண்ணவர் மகளிர் ஒத்தார் - சீவக. 2716

6. வாச எண்ணெய்

மெய்வயின், மென்மையும் நேயமும் நன்மையும் நாற்றமும்
ஒருநாள் பூசினம் ஓரியாண்டு விடாஅத்
திருமாண் உறுப்பிற்குச் சீர்நிறை அமைத்துக்
கரும வித்தகர் கைபுனைந்து இயற்றிய
வாச எண்ணெய் பூசினர் போற்றி - பெருங். 2-5-96-101

ஒருபகல் பூசின் ஓராண்டு ஒழிவின்றி விடாது நாறும்
பெரியவர் கேண்மை போலும் பெறற்கரும் வாச எண்ணெய்
அரிவையர் பூசி ஆடி அகிற்புகை ஆவி ஊட்டி. - சீவக. 2737

7. யாழ் நரம்பின் புரிநெகிழ்த்து உரோமம் காட்டல்.

குறும்புரிக் கொள்ளாது நெடும்புரித்து ஆதலும்
நிலமிகை விடுதலின் தலைமயில் தழீஇ
மணலகம் பொதிந்த துகள்உடைத்து ஆதலும்
பொன்னே! காண்எனப் புரிமுறை நெகிழ்த்துத்
துன்னார்க் கடந்தோன் தோன்றக் காட்ட - பெருங். 3-15-42-46

தீந்தொடை நரம்பின் தீமை சிறிதலாப் பொழுதும் ஓதிப்
பூந்தொடை அரிவை காணப் புரிநெகிழ்த்து உரோமம் காட்ட - சீவக. 721

8. யாழும் மிடறும்

இயம்வெளிப் படுத்தபின் இசைவெளிப் படீஇய
எரிமலர்ச் செவ்வாய் எயிறுவெளிப் படாமைத்
திருமலர்த் தாமரை தேன்முரன் றதுபோல்
பிறந்துழி அறியாப் பெற்றித்து ஆகி .... .... ....
மாத்திரை கடவா மரபிற்று ஆகிக்
கொண்ட தானம் கண்டத்துப் பகாமைப்
பனிவிசும்பு இயங்குநர் பாடோர்த்து நிற்ப - பெருங். 1-37-119-130

கருங்கொடிப் புருவம் ஏறா கயல்நெடுங் கண்ணும் ஆடா
அருங்கடி மிடறு விம்மா அணிமணி எயிறும் தோன்றா
இருங்கடல் பவளச் செவ்வாய் திறந்து இவள்பாடி னாளோ
நரம்பொடு வீணை நாவின் நவின்றதோ என்று நைந்தார் - சீவக. 658

www.padippakam.com



9. மயிர்குறைகருவியைப் பயன்படுத்துதல்

இலக்கணம் பிழையா எஃகமை இரும்பின்
நீர்அளந்து ஊட்டிய நிறைஅமை வாளினைப்
பஞ்சிப் பட்டொடு துரூஉக்கிழி நீக்கிப்
பைங்கதிர் அவிர்மதி பாகத் தன்ன
அங்கேழ்க் கல்மிசை அறிந்துவாய் தீட்டி
வெங்கேழ்த் துகில்மிசை விதியுளி புரட்டிச்
செங்கேழ்க் கையின் சிறந்துபா ராட்டி
ஆசறு நறுநீர் பூசனை கொளீஇ
வாட்டொழில் கம்மம் வல்லிதின் பிழையாது
கண்ணினும் மனத்தினும் கையினும் அமைத்த
மண்ணுவினை மயிர்த்தொழில் நன்னல நாவிதன் -பெருங். 2-4-165-77

ஆய்ந்தபொன் வாளை நீக்கி, அவிர்மதி பாகக் கல்மேல்
காய்ந்தவாள் கலப்பத் தேய்த்துப் பூநிறீஇ காமர்பொன்ஞாண்
தோய்ந்ததன் குறங்கில் வைத்துத் துகிலினில் துடைத்துத் தூய்தா
வாய்ந்தகை புரட்டி மாதோ மருள்தரப் பற்றி னானே - சீவக. 2496

ஏற்றி யும்இழித் தும்இடை ஒற்றியும்
போற்றிச் சந்தனம் பூசிகின் றான்எனக்
கூற்ற னான்முகம் கோலம்செய் தான்கடல்
தோற்றும் செஞ்சுடர் போலச் சுடர்ந்ததே - சீவக. 2497

10. நட்பின் திறன்

அற்றம் காத்தலின் ஆண்மை போலவும்
குற்றம் காத்தலின் குரவர் போலவும்
ஒன்றி ஒழுகலின் உயிரே போலவும்
நன்றி அன்றிக் கன்றியது கடிதற்குத்
தகவில செய்தலின் பகைவர் போலவும்
இனையன பிறவும் இனியோர்க்கு இயற்றிய படுகடன்.
-பெருங். 2-9-219-224

பொருந்தலால் பல்லி போன்றும் போற்றலால் தாயர் ஒத்தும்
அருந்தவர் போன்று காத்தும் அடங்கலால் ஆமை போன்றும்
திருந்துவேல் தெவ்வர் போலத் தீதுஅற எறிந்தும், தெய்வ
மருந்தினால் மனைவி போன்றும் மதலையைக் காமின் என்றான்.
- சீவக. 1895

பெருங்கதையாம் அமுதக்குடத்திலிருந்து ஓர் அகப்பை முகந்து வழங்கியவாறு இது. □

## வாழ்நாள் உறுப்பினர்

பாவலர் இராச. தியாகராசன்
புதுச்சேரி - மின்னிதழ், 26, நேரு நகர், புதுச்சேரி - 605 011.
நன்றி! - ஆசிரியர்






புதுச்சேரி அரசு

# வளமான புதுவைக்கு நலம் சேர்க்கும் பணிகள்

**பெருந்தலைவர் காமராஜர் பாதையில், அன்னை சோனியா காந்தி அவர்களின் வழிகாட்டுதலின் பேரில் மாண்புமிகு பாரதப் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்களின் ஆலோசனையின்படி செல்லும் நேர்மையான, எளிமையான, வெளிப்படையான மக்களாட்சி**

- நாட்டிலேயே முதன் முதலாக வேளாண் தொழிலாளர்களுக்குச் சிறப்புக் காப்பீட்டுத்திட்டம் அறிமுகம்.
- இயற்கைச் சீற்றத்தினால் சேதமடையும் பயிர்களுக்கு எக்டேர் ஒன்றுக்கு ரூ. 3,750/- ஈட்டுத் தொகையாக வழங்கப்படுகிறது. காப்பீட்டுத் தொகை பெறும் வகையில் முழுப்பாதிப்புச் சான்றிதழ் அளிக்கப்படுகிறது.
- வறட்சி, புயல், கடும் மழை போன்ற இயற்கைச் சீற்றங்களால் பயிர் பாதிப்படைந்த 36,138 விவசாயிகளுக்கு இழப்பீடாக ரூ 5.40 கோடி அளவிற்கு உதவித் தொகை.
- சுனாமியால் பாதிக்கப்பட்ட விளைநிலங்களை சீர்திருத்த விவசாயிகளுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ. 60 ஆயிரம் ஒருமுறை கொடை மற்றும் சுனாமியால் பாதிக்கப்பட்ட வேளாண் கூலித் தொழிலாளர்களுக்கு ஒரே தவணையாக ரூ. 5 ஆயிரம் நிதி உதவி.
- படித்து வேலையில்லாத அரசு வேலைவாய்ப்பு வயது வரம்பைக் கடந்த இளைஞர்களுக்கு இறைச்சிக் கோழிப்பண்ணை, முயல் பண்ணை, ஜப்பான் காடை பண்ணை, பால் பண்ணை மற்றும் ஆட்டுப் பண்ணை அமைக்க 75% மானியம்.
- சுதேசி மற்றும் பாரதி பஞ்சாலைகளை புதுச்சேரி நெசவாலைக் கழகம் ஏற்பு.
- சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ரூ. 40 இலட்சத்திலிருந்து ரூ. 1 கோடியாக உயர்வு.
- உள்நாட்டு மீன் வளர்ப்போருக்கு ஏக்கருக்கு ரூ. 5,000/- வீதம் இடுபொருள் மானியம்.
- இயந்திர மீன்பிடி படகுகளைக் காப்பீடு செய்வதற்கு 50 விழுக்காடு மானியம்.
- விரைவில் தனி பள்ளிக் கல்வி வாரியம் தொடக்கம்.
- ராஜீவ் காந்தி காலைச் சிற்றுண்டித் திட்டம் 12–ஆம் வகுப்பு வரை நீட்டிப்பு.
- மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரி மாணவ - மாணவிகளுக்குப் படிப்பு உதவித் திட்டத்தின் கீழ் 60 விழுக்காடு நிதி உதவி.
- அரசு பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ-மாணவிகளின் பொதுத் தேர்வு கட்டணத்தை அரசே ஏற்கும் திட்டம் அறிமுகம்.
- அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் மழலையர் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் இலவசப் பாடப்புத்தகங்கள், எழுதும் சுவடிகள் மற்றும் காலணிகள்.
- சுமார் ரூ. 43 கோடி செலவில் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான மருத்துவமனை உருவாக்கம்.
- மருத்துவ நிதியுதவித் திட்டத்தின்கீழ் சிறுநீரகம் மற்றும் இருதய அறுவை சிகிச்சை மேற்கொள்ளும் நோயாளிகளுக்கு வாழ்நாள் முழுவதும் இலவச மருத்துவ உதவி.
- அடுத்த கல்வியாண்டு முதல் அரசு மருத்துவ கல்லூரி தொடங்க ஆரம்பக் கட்டப் பணிகள் தொடக்கம்.

www.padippakam.com



- ❖ கட்டுமானப் பணியாளர்கள் மற்றும் அமைப்புச் சாரா தொழிலாளர்களுக்கான நலவாரியங்கள் தொடக்கம்.
- ❖ மக்கள் நலன் கருதி கூட்டுறவுக் கட்ட மையம் விற்பனை செய்யும் பொருள்களுக்கு விற்பனை வரிவிலக்கு.
- ❖ பாப்கோ போன்ற நிறுவனங்களிலிருந்து நலிந்தபிரிவினர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக பெற்ற கடன்கள் வட்டியுடன் தள்ளுபடி.
- ❖ வீட்டு மனைப்பட்டாக்கள் வாங்க நெசவாளர்களுக்கு ரூ. 10,000/- மானியம், ரூ. 15,000/- வரை வங்கிக் கடன்.
- ❖ நெசவாளர்களுக்கு முதியோர் உதவித் தொகையாக மாதம் ரூ. 1,000 நிதி உதவி.
- ❖ பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீடு 27 சதவீதத்திலிருந்து 33 சாதவீதமாக உயர்வு, மிகவும் பிற்படுத்தப்பட்டவருக்கு கல்வியில் 20 சதவீதம் ஒதுக்கீடு.
- ❖ புதுவையில் சிறப்புப் பொருளாதார மண்டலம் மற்றும் சுங்கவரியில்லாத் துறைமுகம் அமைக்க ஆரம்பக் கட்டப் பணிகள் தொடக்கம்.
- ❖ பெண்கள் பெயரில் பதிவு செய்யப்படும் அசையா சொத்துகள் மீதான முத்திரைத் தாள் கட்டணம் 50 சதவீதம் சலுகை.
- ❖ வறுமைக்கோட்டிற்கு கீழ்வாழும் 10 ஆயிரம் குடும்பங்களுக்கு இலவச சமையல் எரிவாயு அடுப்பு மற்றும் சிலிண்டர் வழங்கும் திட்டம் அறிமுகம்.
- ❖ சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலோரக் கிராமங்களை புனரமைக்க உலக வங்கி உதவியுடன் ரூ. 180 கோடியில் மறுசீரமைப்புத் திட்டம்.
- ❖ தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் மற்றும் பெண்கள் தொழில் தொடங்க 25 சதவீதம் மானியம்.
- ❖ வேலையில்லாத, படித்த ஆதிதிராவிட இளைஞர்களின் திறமையை மேம்படுத்தும் நோக்கில் ஊக்கத் தொகையுடன் தொழிற் பயிற்சிகள்.
- ❖ 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் ஆதிதிராவிடப் பெண்களின் பெற்றோர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 2,000/- வாய்ப்பூதியம்.
- ❖ கலப்பு திருமணத் தம்பதியினருக்கு வழங்கப்பட்டு வந்த ஊக்குவிப்புத் தொகை ரூ. 10,000/- இல் இருந்து ரூ. 15,000/- ஆக உயர்வு.
- ❖ பெருந்தலைவர் காமராஜர் வீடுகட்டும் திட்டத்தின் கீழ் ஆண்டொன்றுக்கு ரூ. 37.50 கோடி செலவில் 7,500 வீடுகளுக்கு வீடு கட்டத் தலா ரூ. 50,000/- வீதம் நிதியுதவி.
- ❖ பால் பண்ணைகள் அமைக்க 1200 சுய உதவிக் குழுக்களுக்கு 75 சதவீதம் மானியம், 6 கறவை மாடுகளைக் கொண்ட பண்ணைகளுக்கு அதிகபட்ச மானிய தொகையாக ஒரு பண்ணைக்கு ரூ. 50,000/- வரை வழங்கப்படும்.
- ❖ மீன்பிடித் தடைக் காலங்களில் மீனவர்களுக்கு நிவாரணமாக 100 கிலோ இலவச அரிசி ரூ. 500 நிதி உதவி.
- ❖ மீனவர்களுக்கு மீன்பிடி விசைப் படகுகள் வாங்க 40 விழுக்காடு மானியம்.
- ❖ அரசு மருத்துவமனை, மகப்பேறு மருத்துவமனை பொதுப்பிரிவில் பிறக்கும் ஆண், பெண் குழந்தைகளுக்கு இலவச ஆடைகள், துண்டு மற்றும் சோப்பு வழங்கும் திட்டம் அறிமுகம்.
- ❖ முதிர் கன்னிகள், கணவனால் கைவிடப்பட்ட, ஆதரவற்ற பெண்களுக்கு மாதம் ரூ. 300/- நிதியுதவி.
- ❖ ஊனமுற்றோர்களுக்கு வழங்கப்படும் நிதி உதவி, ஊனத்தின் தன்மை 40% இல் இருந்து 74% வரை உள்ளவர்களுக்கு ரூ. 500/- ஆகவும் 75% இல் இருந்து 99% வரை உள்ளவர்களுக்கு ரூ. 750/- ஆகவும் 100% உள்ளவர்களுக்கு ரூ. 1000/- ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.
- ❖ ஊனமுற்றவர்களின் வேலைவாய்ப்பிற்கான அதிகபட்ச வயது வரம்பு 10 ஆண்டுகள் வரை நீட்டிப்பு. வேலைவாய்ப்பில் 3 விழுக்காடு இடஒதுக்கீடு.
- ❖ பார்வை இழந்தோர்க்கு வானொலிப் பெட்டி வழங்கும் புதிய திட்டம் அறிமுகம்.
- ❖ வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் சிவப்பு அட்டைதாரர்களுக்குக் குடும்பப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் குடும்பத்தலைவர் இறக்க நேரின் ரூ. 25 ஆயிரம் மற்றும் ரூ. 40 ஆயிரம் நிதியுதவி.
- ❖ விதவைகள் மறுமண உதவித் தொகை ரூ. 10,000/- இல் இருந்து ரூ. 15,000/- ஆக உயர்வு.
- ❖ முதியோர் மற்றும் விதவைகள் ஓய்வூதியம் ரூ. 225/- இல் இருந்து ரூ. 300/- ஆக உயர்வு.
- ❖ மாங்கல்யத்திற்கு மானியம் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதியுதவி ரூ. 1000/- லிருந்து ரூ. 2000/- ஆக உயர்வு.
- ❖ கடந்த நான்கு ஆண்டுகளில் அரசு துறைகளில் மட்டும் சுமார் 12,000 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.
- ❖ நாட்டிலேயே முதன்முறையாகப் புதுவையில் பெண்களின் புகார்களை விசாரிப்பதற்கென்று ஒவ்வொரு காவல் நிலையத்திலும் தனிப்பிரிவு தொடக்கம்.
- ❖ மாஹே நகர்புறப் பகுதிக்கு சுமார் ரூ. 15 கோடியில் அஞ்சரக்கண்டி குடிநீர் திட்டப் பணிகள்.
- ❖ மாஹேவில் நவீன உள் விளையாட்டரங்கம்.
- ❖ ஏனாம் பகுதிக்கு ஆந்திரப் பிரதேசம் கோதாவரி நதியிலிருந்து பிரெஞ்சு வாய்க்காலில் நீர் பெறுவதற்கு ஆந்திர அரசுடன் ஒப்பந்தம்.
- ❖ ஏனாமில் ரூ. 4 கோடி செலவில் உள் விளையாட்டரங்கம்.
- ❖ வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்ட வீடுகளுக்கு வட்டி தள்ளுபடி ரூ. 12.75 கோடி.
- ❖ ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் வீடு கட்ட வழங்கப்பட்ட கடன் வட்டி மற்றும் அபராத வட்டி ரூ. 5.18 கோடி தள்ளுபடி.

**பொற்கால ஆட்சியின் பணிகள் தொடரும்....**

No. 7472 / INFO/ADVT/2005-06

வெளியீடு : செய்தி மற்றும் விளம்பரத்துறை, புதுச்சேரி அரசு

www.padippakam.com




# தமிழீழத் தமிழரை
# இலங்கை மலையகத் தமிழரை

**நீங்களும் பாருங்கள்! நீங்களும் பேசுங்கள்!**

**வே. ஆனைமுத்துவின்**

- *அயல்நாட்டுப் பயண விவரங்கள் அடங்கிய அரிய கள ஆய்வு நூல்.*
- *220 பக்கங்கள் – உயரிய தாளில் அச்சிடப்பட்டது.*
- *மொத்தம் 64 அரிய படங்கள் கொண்டது.*
- *32 பக்கப் படங்கள், உயரிய வழவழப்பான (ஆர்ட்) தாளில்.*
- *பளவண்ண முகப்பு அட்டை கொண்டது.*

**விற்பனை விலை உருவா ரூ. 120/**
**முன்பதிவு விலை உருவா ரூ. 60/**

- 15-9-2005க்குள் பணமாகவோ, வங்கி முறியாகவோ விடுத்து முன்பதிவு செய்யுங்கள்!
- ஒவ்வொருவரும் 5 படிகள் வீதம் விலைக்குப் பெற்றுப் பரப்பிட முந்துங்கள்!
- 18-9-2005 முதல் தந்தை பெரியார் 127 ஆவது பிறந்தநாள் விழாக் கூட்டங்களில் ரூ. 80க்கு இந்நூல் கிடைக்கும்.

**பணம் விடுத்திட முகவரி :**

**வே. ஆனைமுத்து (V. ANAIMUTHU)**

பெரியார் நூழில் வெளியீட்டகம்

19, முருகப்பா தெரு (மாடி), சேப்பாக்கம், சென்னை - 600 005.

நற்றமிழ்-உ0ரு.சு, கன்னி (புரட்டாசி) 15-9-2005 கரு (15)

# கொடுத்தபடி தொடுத்த பாடல்கள்

## வஞ்சி விருத்தம்-6

கருவிளம்+விளம்+காய்

பிறப்பதும் உண்மையாம்! பின்னரிங்கே
இறப்பதும் உண்மையாம்! இவையுணர்ந்தோர்
துறப்பதும் உண்மையாம்! செய்ந்நன்றி
மறப்பதும் உண்மையாம் மாநிலத்தே!

1. - கவிஞர் கி. பாரதிதாசன், பிரான்சு.

மனைவியை அடிப்பவன் மனிதனில்லை
கணவனைப் பழிப்பவள் மனைவியில்லை
கனவினில் மிதப்பவன் வாழ்வதில்லை
நினைவினில் வாழ்பவன் சாவதில்லை!

2.- கவிஞர் தே. சனார்த்தனன், முதலியார்பேட்டை.

அருள்தரும் அறத்தினை அகம்நிறுத்தி
இருள்தரும் இடரினை எற்றிடுக!
பொருள்தரும் நலத்தினில் புதையாமல்
மருள்தரும் செயல்களை மாய்த்திடுக!

3.- பாவலர் வே. முத்தையன், முத்தியால்பேட்டை.

மலைகளை உடைப்பது கடினந்தான்
கலைகளை வளர்ப்பது கடினந்தான்
விலைகளைக் குறைப்பது கடினந்தான்
சிலைகளைச் சிதைப்பது கடினமில்லை!

4.- கவிஞர் வே. பூங்குழலி பெருமாள், திரு.வி.க. நகர்.

அழுதிடும் ஏழைகள் துயர்நீக்கத்
தொழுதிடும் அரசியல் வாதிஎண்ணார்!
உழுதிடும் பஞ்சைகள் படுந்துயரை
எழுதிடத் தமிழிலே இயன்றிடுமோ!

5. - புலவர் வேங்கடராசன், திருவரங்கம்.

இயலொடும் இசையொடும் கூத்தொடுமாய்
நயமுற அறம்பொருள் இன்பமொடாய்ப்
பயனுறு பற்பல நூல்களினைப்
பயந்தவள் என்றிடும் பைந்தமிழே!

6. - வ. சிவசங்கரன், திருக்கழுக்குன்றம்.

மிகுதியாய் இலக்கியம் கொண்டதுவாம்
தகவுடைச் செம்மொழி செந்தமிழே!
புகழுடை நம்மொழி ஓங்கிடவே
தொகைபல ராகியே உழைத்திடுவோம்!

7. - இசைவாணர் எ. சிவாநந்தம், பாகூர்.

மிகுபணம் உளதெனில் மிடுக்குவேண்டாம்
தகுநிலை குறைந்திடின் தவிடென்பார்
நகுவதால் பகைவரும் நலம்வளம்போம்
பகுத்தறி விலாதவன் பயனிலாதான்.

8.- கலைமாமணி கோ. தனபாலன், வில்லியனூர்.

மொழியது தமிழென மொழிந்ததோடு
விழியெனக் கொண்டதை மேலைநாட்டார்
அழிவிலா நூல்பல ஆய்ந்தபின்னே!
மொழிபெயர்த் தளித்தனர் உலகினுக்கே!

9. - புலவர் அ. பக்கிரிசாமி, திருநள்ளாறு.

குலைகுலை யாகவே தென்னையும்
மலையென ஓங்கியே நின்றிடவும்
அலையது காற்றுடன் வந்திடவும்
நிலைதனை மாற்றியே சென்றனவே!

10. - த. தட்சணாமூர்த்தி, திரு.பட்டினம்.

கருவினில் தாங்கியே உந்தனுடல்
உருவினைத் தந்தவள், அன்னையவள்
அருளினைப் போற்றியே நெஞ்சுருகி
உரற்றுவோம் நமதுயிர்க் கடவுளென்று!

11. - இரா. தமிழ் அழகன், திருக்கழுக்குன்றம்.

பழகிடும் பழக்கமும் உரியநட்பும்
கழகமும் புலவரும் கனித்தமிழும்
பழமுதிர் மரம்அடர் மலைதவழும்
குழமுகில் போல்நிலை பெறவேண்டும்.

12. - பாவலர் தேவமைந்தன், புதுவை.

புலன்களை அடக்கிடும் மனதுடையோன்
அலந்தலை யின்றியே வாழ்ந்திடுவான்
புலன்களுக் கடங்கிய மனதுடையோன்
நலங்கெட வெஞ்சிறை வீழ்ந்திடுவான்.

13. - இரா. அருணாசலம், ஆனந்தா நகர்.

இலக்கியம் பயில்பவர் எல்லாரும்
பலதுறை அறிவினைப் பெறுவதுடன்
உலகினில் பிறர்தமக் குதவிசெயும்
விலையிலா அன்பினைப் பெற்றிடுவார்.

14. - பாச்சுடர் வளவ. துரையன், கடலூர்.

மரபினைப் போற்றிடு வாழ்வினிலே
வருகிற புதுமையைத் தள்ளாதே
உரிமையைப் பெற்றிடப் போராடு
தெரிகிற தீமையை எதிர்த்துநிற்பாய்!

15. - அ.ப. சுப்பிரமணியன், கிருட்டினாபுரம்.

கனிவுடன் பிறரிடம் பேசிடுவாய்!
சினத்தினை முற்றிலும் நீக்கிடுவாய்!
மனத்தினில் பொறுமையை ஏற்றிடுவாய்
உனக்கொரு கொள்கையைக் கொண்டிருப்பாய்!

16. - பாவலர் பசுமணி, கூத்தப்பாக்கம்.

www.padippakam.com



பெறுவதும் பெற்றதும் பெரிதாமோ?
பெறுவதும் வருவதும் என்னாமோ?
உறுவதும் உணர்வதும் உயர்வானால்
பெறுவதும் வருவதும் இனிதாமே!
17. - கொட்டப்பட்டு, ப. சக்திவேலன்.

தமிழ்ப்பகை நீங்கிடச் செய்திடுவாய்
தமிழினை மூச்செனப் போற்றிடுவாய்
தமிழ்தனை நாடொறும் கற்றிடுவாய்
தமிழ்மொழி சிறந்தினி ஓங்கிடவே!
18. - ச. திருநாவுக்கரசு, முசிறி.

கருமுகில் குழலது நிலந்தொடவே,
இருவிழிக் கணையது உயிர்குடிக்க,
வருமயி லெனுமவள் நடைகாணும்
திருவுடை இளமன மென்படுமோ!
19. - அகரமுதல்வி, பொன்மலை.

மலர்ந்திடும் பூமழை ஒழுக்கினிலே
உலர்ந்திடும் பூமகள் நனைகின்றாள்!
தளர்ந்திடும் பூவுயிர் கட்கெல்லாம்
அளித்திடும் கனிவுறு நல்வாழ்வே!
20. - சா. இராசலிங்கம், திருவண்ணாமலை.

எழிலுறும் தமிழ்மொழிச் சீர்மையினைப்
பழித்துரை செய்பவர் எவரெனினும்
'சுழி'என ஒதுக்கிடு! தமிழ்எழிலை
வழிவழி காத்திடு தமிழ்மகனே!
21. - வே.இரா. சிவஞான வள்ளல், வேலூர்.

தமிழினில் பயில்முறை இனியதுவே!
தமிழரின் உணர்வுகள் அரியவையே!
தமிழிசை தருவது மகிழ்வினையே!
தமிழ்தரு திருக்குறள் பொதுமறையே!
22. - ப. முத்தமிழ்வாணன், புதுவை.

மதியொடு குலவிடும் உடுக்கணங்கள்
சதிர்புரி அரிவைசூழ் பெண்கணங்கள்
நிதியுறு பெருமன வண்மையர்கள்
சுதியுடன் இசைத்திடும் பாவலர்கள்.
23. - புதுவை. ப. அங்கயற்கண்ணி, புதுவை.

அமிழ்தொடு நலந்தரு மொழியெனவே
தமிழினை ஒப்பிட முனைந்திடிலோ
அமிழ்தமும் ஈடென ஆயிடுமோ?
தமிழ்மொழி உயர்மொழி; அறிகுவமே!
24. - அதலை இராமன், மதுரை.

உனையொரு முறைத்தொட எனக்குளார்வம்
எனைமறந் துநீநடப் பதுசரியோ!
மனைவியாய் வருவது கடினமோசொல்
துணையெனக் குநீவரத் துடிக்கிறேனே!
25. - கே.வி. சனார்த்தனன், காஞ்சிபுரம்.

கருவறைக் குள்ளுனைக் கருத்தாக
உருப்பெறக் காத்துனைப் புறமீன்று
வருந்திட நோன்புகள் பலவேற்ற
விழுப்புறு தாயுமே விடுதியிலோ?
26. -

பசிப்பிணி தடுத்திட வேண்டுமென்றார்
புசித்திடும் புலால்அதை விடுகவென்றார்
கசிந்திடக் கருணையைக் காட்டென்றார்
இசைத்திடும் கவிதையில் வள்ளலார்தான்.
27. - சூலூர்க் கலைப்பித்தன்.

நிலவினை நீள்முகில் தான்போர்த்தி
வலம்வரு வான்மதி முகம்மறைக்க
நிலமுள குளமதில் குமுதமிதழ்
மலர்ந்துமே நலம்தர மயங்கிடுதே!
28. - புலவர் ந. ஞானசேகரன், திருலோக்கி.

பலவகை ஆற்றலர் பாவலவர்
துலங்குநன் னூல்களின் ஆசிரியர்
உலவிடும் காற்றென உரைமொழியர்
பலர்புகழ் படைக்களப் பாவலரே.
29. - தேன்மொழி, ஆர்க்காடு.

பலருமே வியந்திடும் பண்புடையான்
நலமதே நடப்பென நனியுழைப்பான்!
கலங்கரை விளக்கெனும் கனித்தமிழன்
பலர்புகழ் பரிதியாய்ப் பார்நிலைப்பான்!
30. - படைக்களப்பாவலர், ஆர்க்காடு.

உருப்படி யாகிட உயர்கல்வி
தருகெனக் கேட்டனம் தமிழ்வழியே!
பருவர லுற்றனம்! பாவியர்கள்
தருகிலர்! தமிழரும் தாழ்ந்தனரே!
31. - எறும் ஏந்தல், விழுப்புரம்.

நிலவென ஒளிமுக வெழிலுடையாள்
நிலமக ளெனநனி நிறையுடையாள்
மலைதழு விடுகுளி ரருவியதாய்ப்
புலனொடு பொருதுளம் புகுந்தனளே!
32. - கலைமாமணி கோவி. கலியபெருமாள்,

உனக்கெனத் தனிவழி கண்டிடுவாய்
இனம்மொழி தமிழ்தனைக் காத்திடுவாய்
கனவினைக் கண்டது போதுமப்பா
நனவினில் எடுத்ததைச் செய்திடுவாய்!
33. - க. சண்முக சிதம்பரம், தரகம்பட்டி.

கருவறை இருந்ததே உனக்காக
சிறுவறை இல்லையோ எனக்காக?
இருவென முதியவர் இல்லத்தில்
"பெருமனங்" கொண்டுநீ சேர்த்தாயே!
34. - இராசபாரதி, திருவண்ணாமலை.

www.padippakam.com



தமிழ்மொழி தரணியின் தலைமொழியாம்!
அமுதினை அனையநல் அருமொழியாம்!
நமதிரு விழிநிகர் நலமொழியாம்
தமிழினைத் தழைத்திடச் செயல்கடனே!
35.- வெ. பரமசிவபாண்டியன், சின்னாளபட்டி.

சிறைத்துறை, நிதித்துறை நீதிவகைத்
துறைகளும் விளைவுமே செல்வந்தர்
முறைப்படி உயரவே செய்கின்றார்
வரைமுறை விடிவே பொதுவுடைமை!
36.- பாவலர் ஆ. கோவிந்தராசலு, கரிக்கலாம்பாக்கம்.

பலப்பல உடுக்களின் படரொளியில்
வலம்வரும் வானிடை வட்டநிலா
அலைகடல் வீசிடும் ஆர்ப்பரிப்பால்
கலைவிழா நடத்துமே காலைவரை.
37. - வி. சங்கர், பருத்திப்புத்தூர்.

உடைகளைக் களைவதில் கலையுலகம்
தடைகளைத் தகர்த்துமே வருவதாலே
கடைகளில் வணிகமே பெருக்கிடவே
உடலினை யொளித்திடா விளம்பரங்கள்.
38. - அ. இலக்குமணன், திருநள்ளாறு.

குறைமிகு திரைப்படத் தீமைகளை
முறைப்படி அகற்றிட நம்நீதித்
துறையினர் சுழற்றிடும் சாட்டையினால்
கறைமனம் உடையவர் திருந்தாரோ!
39. - பாவலர் கு. தட்சணாமூர்த்தி, முதலியார்பேட்டை.

இருபெரு நிலவுல கியற்கையதால்
திருவொடு வறுமையுள் திகழ்முரண்காண்
சிறுகுடை விரிந்திடில் கடைதலையாம்
உறுசுரை முழுக்கமு மிதப்பதுவாம்.
40. - மணிமொழியார், பொள்ளாச்சி.

மனத்தினில் வானெனக் கற்பனைகள்
கனவுகள் ஆயிரம் கடலளவாம்!
உனதுளம் மண்ணென உறைந்திருந்தால்
மனத்தய ரெங்ஙனம் உணருவையோ?
41. - ஆ. சோதிமலர், விளாப்பாக்கம்.

தமிழினம் தனைஅழித் திடநினைத்தே
தமிழ்மொழி தனைச்சுழித் திடமுனைந்தார்
தமிழ்மொழி நிலைத்திட, அவர்மொழியே
அமிழ்ந்தது மறைமொழி அவர்வழியே!
42. - புதுவை நா. இராசசெல்வம், புதுவை.

நிலம்தரு பாண்டியன் வழிவந்தோர்
கலம்வழி உலகினை வலம்வந்தென்?
புலம்பெயர் பொய்யரின் புன்கதையால்
இலம்எனப் தோன்றிடும் இழிநிலையேன்?
43. - வில்லியன், புதுவை.

திருத்தணி வடக்கெனத் தமிழ்நாட்டின்
திருத்தகு பாயிர இலக்கணத்தைத்
திருத்திய மபொசியாம் சிகாமணியே!
திருத்தமிழ் உளவரை வாழியவே!
44. - தே. முருகசாமி, புதுவை.

குறள்வழி வாழ்பவன் வாழ்க்கையில்
அறவழி இயல்புடன் செயலாகும்
சிறப்புற வாழ்ந்திட வழிசெய்யும்
நிறைந்திடும் குறள்நெறி பாரெங்கும்.
45. - அண்ணா. தருமலிங்கம், புதுவை.

படையிலே புதுமையைச் சேர்க்கின்றோம்
கொடையிலே பழமையைப் பார்க்கின்றோம்
உடைமையாய் உதவிடும் இல்லறத்தில்
மடந்தையை மதிப்பவர் எத்தனைப்பேர்?
46.- தி. பக்கிரிசாமி, திருமலைராயன்பட்டினம்.

எழுத்தறி யாதவ ரிழுக்கிடினும்
பழுத்தவ ருழக்குவ தழகன்றே!
கொழுத்தவ ரேட்டினில் குவிப்பதுவுஞ்
செழுமையைத் தேக்கிடச் செய்வதற்கே!
47. - புலவர் த. ஆறுமுகம், சென்னை.

மலரிடை வண்டென, நறுந்தமிழே!
நிலவிடும் நின்சுவை நுகர்கின்றேன்
நலமிகு செம்பொருள் நயங்கண்டே
புலமையின் மாட்சியில் பொலிகின்றேன்.
48.- புலவர் மா.சு. மணி, திருக்கழுக்குன்றம்.

கனவினில் ஒள்எழில் கோள்ஒன்று
வனப்பினில், செழிப்பினில் மிகஉயர்வே!
இனத்தினில் ஒன்றிய மாந்தர்கள்
நனவினில் வந்திட ஏக்கறவு.
49. - த. கருணைச்சாமி, தேனி.

பலருடன் உறவுறும் நறுமலரும்
உலவிடும் கதிர்களும் தண்டொருகால்
நலந்தரு மனைவியின் பெருவினையாய்
உலகியல் ஒதிலை மலர்ந்தவனே.
50. - புலவர் இடிமுரசார், சென்னை.

அறிவொளி என்றொரு பாவலன்தான்
நெறியுடன் பற்பல பாப்புனைந்தான்
வறியவர் உலகினில் உயர்வதொன்றே
குறியெனக் கொண்டவன் வாழ்வினிலே!
51. - சு. சொக்கலிங்கம், புதுவை.

அதிர்கடல் வெண்ணுரை அழிவதுபோல்
எதிர்வரு நாளினில் தமிழ்மொழிதான்
உதிருமோ சொல்லடா உடன்பாடே
எதிர்மறை யாகுமோ என்மொழிதான்?
52. - முனைவர் தமிழப்பர், சென்னை.

படிப்பகம்

www.padippakam.com



சுவைநவில் பாவியம் தெளிந்திடவே
இவைபொருள் என்றுரை ஆசிரியர்
நவைதவிர் நல்லுரை கூறிலரேல்
எவைபொருள் எனவுணர் திறனிலமே!
53. - சு. இலம்போதரன், சென்னை.

ஒருமுறை தோற்றிடின் ஓயுவதோ?
விருப்புடன் மறுபடி முயலுவதே
திருவினை ஆக்கிடும் நன்முயற்சி!
வருவது வரட்டுமே முயன்றிடுவீர்!
54. - சி. பாலகிருட்டினன், கோலியனூர்.

உடையதில் மட்டுமே நான்துறவி
நடையதில்? கேட்கவே கூடாது!
மடமது மாந்தருள் உள்ளவரை
திடமுடன் நிமிர்ந்தினி திருப்பேனே!
55. - சு. இளங்கண்ணன், கோலியனூர்.

தமிழுடன் உயர்வினைப் பெறுமளவும்
தமிழகம் சிறப்புகள் பெற்றிடுமாம்
பிழையிலாக் கவியினால் தமிழ்மொழிக்குச்
செழுமையை நாள்தொறும் வளர்த்திடுக.
56. - தங்க. சங்கரபாண்டியன், சென்னை.

விழித்தெழு மாந்தனே விழித்தெழடா!
விழியினில் ஒளியினை ஏற்றிடடா!
பழியெது நேரினும் துடைத்திடடா!
அழித்திடு தமிழ்ப்பகை அழித்திடடா!
57. - பா. விசயலட்சுமி, கோலியனூர்.

உலகியல் நிலைதனை விளக்கிடுவோர்
உலகினில் உயர்ந்ததை மொழித்திடுவோர்
உலகினர் சிறந்திட உழைப்போராய்
உலகினில் திகழ்ந்திட விழைவாரா?
58. - பெருமாங்குப்பம் சா. சம்பத்து.

அருந்தமிழ்ப் புதையலோ இல்லிருக்கத்
திருவினை அறிந்திடும் அறிவின்றி
உருப்படாத் தமிழனாய் ஏதிலியாய்த்
தெருவினில் இரக்கிறான் மானமின்றி!
59. - பாவலர் கருமலைத்தமிழாழன், ஓசூர்.

அமிழ்தினும் இனியதாம் சுவைசான்ற
தமிழ்மொழி தாய்மொழி பெற்றோம்நாம்
தமிழராய் வாழ்ந்திட வேண்டுமெனில்
தமிழ்வழிக் கல்வியைப் போற்றிடுவோம்.
60. - ஆ.வே. இராமசாமி, திருச்சி.

குறள்வழி ஒன்றதே குவலயத்தில்
அறவழி யாமென அறிவீரே!
பிறவழி யாவிலும் குறையுண்டு
திறமுடன் அவ்வழி நடப்பீரே!
61. - தமிழமுதன், இராம்பாக்கம்.

கடலலை போலுமே தமிழர்கள்
உடன்வரு வாரெனில் தமிழ்மொழியும்
இடரதும் இன்றியே உலகத்தில்
சுடர்விடும் என்பதில் ஐயமில்லை!
62. - ஏர்முனை மூ. குழ. மூர்த்தி, வேலாயுதம்பாளையம்.

தமிழகம் உலகினில் சிறந்துவாழ்க!
தமிழினம் மனிதரில் உயர்ந்துவாழ்க!
தமிழ்புவி மொழிகளின் தலைமைகொள்க!
இமிழ்கடல் வரைநிலம் இனிதுவாழ்க!
63. - கருவை. மு. குழந்தை, கரூர்.

வழவழப் பேச்சிலே அழகில்லை
வழவழப் பூச்சிலே அழகில்லை
அழகெது எனவின வினால்விடையே
பழச்சுவை யாம்தமிழ்ப் பாத்தானே!
64. - இதயகீதன், தேனி.

சிலநொடி சுணக்கமும் இல்லாமல்
நிலந்தரு நீள்வளத் துடனேநாம்
நலந்தரும் உடலுரம் கொண்டேதான்
வளந்தரும் தொழில்பல செய்குவமே.
65. - தி.ப. சண்முகம், திருக்காடுதுறை.

தினமொரு குறளினை நீபடித்தால்
மனமது பண்பட்டும் மாண்படைவாய்
மனவிருள் கணையென மிகவிரைந்தே
உனைவிடும் நலமுனை நாடிடுமே.
66. - பாவலர் க. துரையரசன், வே.பாளையம்.

தமிழினை அன்னையென் றழையன்மின்
தமிழினை இறையெனப் போற்றன்மின்
தமிழினைப் புகழ்ந்திடும் பாங்கைவிட்டுத்
தமிழினைப் புரந்திடும் வழிகாண்பீர்!
67. - அரங்க. பணிக்குன்றன், புதுவை.

அலைகடல் ஆர்த்தெழப் படகுடனே
வலைஞரின் குடிசைகள் குலைந்தனகாண்
நிலைதரு மாறிடும் மாண்புகளார்
உளைச்சலும் கொருவழி தெரிந்திலரே.
68. - மு. இராம. கனகராசன், புதுவை.

அழகிலே நீரதி அதனால்தான்
எழாமலே இருந்துவிட் டேன்இன்னும்
இழுத்துவிட் டாய்விழி யால்எனையே
உழுதுசெல் விழியினால் உயிர்பெறுவேன்.
69. - அ. செயபால், தென்நெற்குணம்.

ஒருபுறம் ஆரியம் ஊறிழைக்க
ஒருபுறம் ஆங்கிலம் அலக்கழிக்க
ஒருபுறம் இதழ்களும் இடறுவிக்கப்
பருவரல் உறுவதோ பைந்தமிழே.
70. - சீ.பெ. முத்துக்குமரன், கோவை.

படிப்பகம்

www.padippakam.com



மகனவன், மகளவள் குடும்பத்தில்
அகமதில் இருவரும் சரிசமம்தான்
மகனவன் உயர்ந்தவன் மகளவள்ஏன்
தகவிலை, கருத்தது பிழையதுகாண்.
71. - கோ. செல்லம்மாலள், செங்கம்.

நதியெலாம் உலகினுக் குரியதாகும்
நிதியிலை வழியவை, சரியிலைதான்!
மதிமிகு செயலவர் முடித்திடுவர்
பதியினில் வளம்மிகும் நலம்வளரும்.
72. - கவிஞர் சசி, தேக்கவாடி.

படுதுயர் விடுபட இறைவழிநில்!
விடுபடும் துயரது நினைவினில்கொள்
நடுவினில் நிலைப்பட அறமது செய்!
தடுத்திடு நெறியிலார் செயலதைப்பின்.
73. - கு. கோவிந்தன், செங்கம்.

களத்தினில் இறங்கிடக் கணித்துவிட்டோம்
உளத்தினை இரும்பென வளர்த்திட்டோம்
நிலத்தினைப் படைத்திட முனைந்திட்டோம்
உலகினில் உயர்ந்திட உழைத்திடுவோம்.
74. - இரா.கு. அரங்கசாமி, தங்கவயல்.

அடிதொறுஞ் சுவைதரு மருந்தமிழே!
அடியவர் மனத்தெழு நறுஞ்சுவையே!
மடிதவழ் மழலையு முறுந்தமிழே!
மடிந்திடு முயிரையு மெழுப்புவையே!
75. - வானவன், வெங்காலூர்.

எழுதரு மேனியாய் அவளிருக்க
முழுதுணர் இளைஞரும் பின்தொடரப்
பழுதறப் பெண்மையாய் அவளிருந்து
பொழுதொரு வண்ணமாய்த் துரத்தினளே!
76. - புதுவை. நா. பொன்னுசாமி.

வறுமையில் வாடிய காலத்தும்
மறுவறு திருவினை மாண்புறவே
செருக்குடன் செய்திடச் சிறப்புறலாம்!
வெறுப்பவர் யாருளர்? விளம்புகவே!
77. - புலவர் செ. இராமலிங்கன், புதுவை.

அழுக்குளம் வெளுத்திட அன்பளிப்போம்
பழுத்தநற் கனியெனப் பரிவளிப்போம்
ஒழுக்கமே உயிரென ஓம்பிடுவோம்
செழித்திடும் வாழ்வெலாம் சீரடைவோம்.
78. - து. ஆதிநாராயணமூர்த்தி, பரதராமி.

நிதமுமே விடியலில் எழுந்திடுவேன்
பதமுடன் பற்பல படைத்திடுவேன்
கதை,கவி, கட்டுரை எழுதிடுவேன்
நிதம்பல படைப்பினால் நிலைத்திடுவேன்.
79. - கற்பகம், பரதராமி.

விரும்பிய உணவெலாம் உண்டிடுவார்
விருந்திடும் நோய்களால் நைந்திடுவார்
வருந்தியும் வாடியும் வதைந்திடுவார்
மருந்தையே உண்டுபின் உழன்றிடுவார்.
80. - ஆதவன், ஆர்க்காடு.

அலைகடல் சென்றிடும் தன்கணவன்
வலையுடன் திரும்பிட விலைஎன்றால்
வலையினில் சிக்கிய மீனாவாள்
வலைஞனை நெஞ்சினில் சுமந்தவளே!
81. - வாழியூர் வே. இராசவேலன்.

இனமதன் பெருமையோ மொழியாலே!
மனமதன் பெருமையோ செயலாலே!
பணமதன் பெருமையோ கொடையாலே!
உனக்குயர் பெருமையோ உழைப்பாலே!
82. - ஆ. முகிலரசி, ஆர்க்காடு.

அரைகுறை ஆங்கில அறிவாலே
வரையிலா தயன்மொழி கலந்துரைக்கும்
நிரையிலான் வாழ்வதும் பயனிலையாம்!
அரையவன் பிறப்பதை ஐயுறுவாம்!
83. - க.த. பூங்குன்றன், மணலூர்ப்பேட்டை.

நரையுடல் பெறுமுனம் நன்மனமே!
திரைகடல் கடந்துமே பொருளீட்டி
அரைவயி றுணவதும் கிட்டாதார்
கரைகுரல் நீக்கிட முனைவாயே!
84.- புலவர் அ. தங்கவேலன், மணலூர்ப்பேட்டை.

திருநிறை யிடையவர் அறம்பலவும்
பெருமன துடன்புனந் திடின்உலகம்
அருமையாம் கொடைத்திறன் எனவியக்கும்;
பெருகுக இவர்பணி புனல்பெருக்காய்!
85. - சீனி. சிவானந்தம், சென்னை.

அருமையாய் அழகொடு திகழ்பவளே
கருமையாய் வளர்ந்திடும் கூந்தலோடும்
உருவமாய்த் தெரிந்திடும் கண்களினால்
பெருமையாய் என்னைநீ பார்ப்பாயா!
86. - இரா. முத்தையன், காவனூர்.

விடுதலை விரும்புவோர் விடுதலையைக்
கெடுமதி மறைத்தலால் தவறிழைத்துப்
படுகுழி யிலிடுகின் றடாதசெயல்
சடுதியில் அழிந்திடல் நலம்பயக்கும்.
87. - செ. பொன்னம்மாள், செஞ்சி கோட்டை.

நெறியிலோர் நெறிமுறை உளதெனவே
நெறியினோர் அறநெறி அறிந்தனரே
நெறியிலார் நெறியினை நெறித்திடலால்
நெறியிலா தழிந்தொழிந் திடுவராமே.
88. - இரா. அரங்கநாதன், இரிசிவந்தியம்.

www.padippakam.com



இனியதோா பனுவலும் படைத்திடவே
இனியராய் உலகமும் புகழ்ந்திடவே
கனியமு தெனத்தமிழ் பயின்றிடுவீர்
இனித்திடும் குறையிலாத் தமிழ்மனமே.
89. - இர. சாலினி, பழவந்தாங்கல்.

உளதெலாம் இலவெனக் குறையுறுவர்
உளமிலா அவரிவண் நிறைவுறலால்
உளவியல் உரைத்திடும் முறையிதுவே
உளவியல் அறிந்திடாற் குறையதுவே.
90. - இர. கணேசு, பழவந்தாங்கல்.

தமிழிலே எழுதிடத் தமிழ்வளரும்
தமிழிலே உரைத்திடத் தமிழ்செழிக்கும்
தமிழிலே படைத்திடின் அறிவியலைத்
தமிழினுக் கழிவிலை, இழிவிலையே.
91. - ஆ. இரவிச்சந்திரன், பழவந்தாங்கல்.

அழகினில் சிறந்தவர் அழகியரோ!
பழகிடும் அனைவரும் நண்பராமோ!
முழங்கிடும் முழக்கமே ஒழுக்கமாமோ!
வழங்கிடும் குணமெலாம் கொடையுளமோ!
92. - க. பாலமுருகன், பனையபுரம்.

மகவிலே மகளிரும் ஆடவரும்
தகவினால் ஒன்றெனக் கொண்டிடுவர்!
அகத்திலோ புறத்திலோ இருவருமே
சகட்டிலும் சமமெனக் கொண்டிடுவீர்!
93. - பா. சத்தியா, வடலூர்.

கருத்திலா மனிதரே கசடராவர்
கருத்தெனும் மருந்துள தெனிலறிஞர்
கருத்துள உழைப்பினன் செழித்திடுவன்
கருதிய முடிப்பவன் கருமத்தான்.
94. - க. கமலா, இரிசிவந்தியம்.

பயனுடை பழுமரம் அடிபடலும்
நயம்பட உரைப்பவர் இகழ்வுறலும்
பயன்படும் பொழுதினில் மனதினிலே
பயனபெற மயக்குவர் மதியிலாரை.
95. - க. குப்புசாமி, இரிசிவந்தியம்.

முயல்பவர் முயற்சியின் திறத்தினாலே
பயனுறல் இனியதாம் முயற்சியிலார்
பயனடை தலைவெறுத் திடல்தவறாம்
முயற்சியின் முகிழ்ப்பினை வழுத்துவமே.
96. - அர. அருண்குமார், இரிசிவந்தியம்.

இரைக்கெனப் பறந்திடும் பருந்தினுக்குத்
தரையினில் கிடந்திடும் இரையதனின்
அரையுரு தெரிந்திடின் மணமறிந்தே
இரையிது வெனவறிந் திடலெளிதாம்.
97. - மு. செந்தில்குமார், செஞ்சிக்கோட்டை

துடித்திடும் நிலையிலும் மணிக்கொடியைப்
பிடிவிடா நெறிமுறை தமிழ்க்குலத்தே
வெடித்திடும் பொழுதிலும் இருந்ததாலே
படித்திடும் நிலையினைப் பெறுவரானார்.
98. - கி. பாண்டுரங்கன், இரிசிவந்தியம்.

கொளகௌ வழிந்திக் கெடுமதியர்
அலைகடல் பெருமலை யிலொழியலே!
நிலையறிந் தினியவை புரிந்திடுவார்
கலைகளில் நிரம்பிய வளம்பெருகவே!
99. - தி. மணிமேகலை, திருவாமாத்தூர்.

மகிழ்ந்திடும் நிகழ்வெனின் மகிழ்ந்திடலும்
தகித்திடும் துயரெனில் தவித்திடலும்
முகிழ்த்திடும் பிறப்பினில் முறையெனவும்
மகிழ்வுடன் மனதினில் இருத்திடுக.
100. - கு. செல்வக்குமரன், கள்ளக்குறிச்சி.

குணமிலா மனைவியால் குடும்பமேது?
மணமிலா மலரினால் மகிழ்ச்சியேது?
இணக்கமில் மனிதரின் இணைப்பெதற்கு?
இணக்கமுள் மனிதனாய் இருந்திடுவீர்!
101. - தி. கதிரவன், திருவாமாத்தூர்.

திருக்குறள் நெறியினைத் திகழ்ஞாலம்
கருத்தினில் கொண்டொழு காததனால்
பெருத்ததே எங்கணும் பிழையொழுக்கம்
வருத்துதே நாடொறும் வன்முறைதான்.
102. - திருவாணன், திண்டுக்கல்.

இயற்கையின் இயல்பினைத் தெரிந்துகொண்டால்
இயற்கையே இறையென விளங்கிவிடும்
இயற்கைதான் இயல்பினில் திரிந்துவிட்டால்
இயங்குமா புவியினில் உயிரினங்கள்.
103. - ச.ந. இளங்குமரன், தேனி.

வளங்கொழி ஊரென நலம்பெறற்கு
வளம்நிறை உளத்தவர் உதவிடலே
தளமென உரைத்துளார் தமிழ்க்குடியோர்
உலகறி குடிகளே உதவிடுவீர்.
104. - இரா. சாதாசிவம், மண்டகப்பாடி.

அறிஞரும் கலைஞரும் பகுத்தறிவான்
வறியவர் வளம்நிறை மகிழ்வுறவே
அறிவொளி கருத்தினைப் பரப்பிடவே
நெறியுடன் உழைத்தனர் உயர்ந்தனரே.
105. - இரா. தயாபரன், அரியலூர்.

அழிவிலா அமுதென நிலைப்பதொன்றே
அழிந்திடும் பொழுதிலும் கைகொடுத்துப
பழியிலா மதியினை நமக்களித்து
விழியென விளங்கிடும் அறிவொளியே.
106. இரா. தெய்வீகன், சங்கராபுரம்.

www.padippakam.com



அயலவர் அரசியல் நிகழ்த்திடலில்
பயனிலா நிலையுறு மனிதரெலாம்
பயந்திடும் அடங்கிடும் நிலையெலாமே
உயர்ந்திடும் அறநெறி அடக்கியதே.
107. - அர. கிரிசாநாதன், இரிசிவந்தியம்.

உலகினில் உருவெடுத் தவரழிவர்
குலப்பெயர் குடிப்பெயர் நிலைத்திடவே
நிலவுல குளார்பல ருமேவிரும்பின்
உலகியல் ஒழுகியே உயர்ந்திடுவர்.
108. - ஆ. இராசு, இரிசிவந்தியம்.

தமிழ்ச்சுவை உணர்ந்தவர் தழைத்திடுவர்
அமிழ்தினும் இனியது தமிழெனவும்
தமிழிசை தழைத்திடச் செயுமெனவும்
தமிழினை தகவுடன் வழுத்துவரே.
109. - தி. தமிழ்க்கொடி, புதுவை.

நலம்விளை மனிதரின் வளமுயற்சி
உலகெலாம் தமிழ்வளர் பெருமுயற்சி
குலத்தினால் தமிழரைச் சிறந்தவராய்
உலகினில் உயர்த்திடும் விடாமுயற்சி.
110. - அர. இளம்பூரணன், தொழுதூர்.

அறிவுடை மனிதரை அனைவருமே
அறிந்திட விரும்புவர் - மதித்திடுவர்
அறிவிலா ஒருவரை அணுகிடாரே
அறிவிலா முரடரும் மனிதராமோ!
111. - செ. இராசலட்சுமி, கள்ளக்குறிச்சி.

பகலென இரவினில் திரிந்திட்டேன்
இகமென மனதினில் பதிந்திட்டேன்
சகமென உன்னையே நினைந்திட்டேன்
சகலமும் உலகினில் மறந்திட்டேன்.
112. - தணிவை. இரா. இராசராசன், கரூர்.

உருவிலா ஒருவனே இறைவனென்றால்
உருவுளார் பலரையும் தொழுவதேனோ?
தெருவினில் இடையினில் தேவனுக்கே
பெரிதெனும் வகையினில் கோவிலேனோ?
113. - மு.வே. கங்காதரன், சென்னை.

குறைவிலா நிதியமே இருந்திடினும்
முறையிலாச் செலவினால் குறைந்திடுமே!
கறையிலா மனிதராய் வசித்திடலால்
குறையிலா நிதியமும் குவிந்திடுமே!
114. - கு. சுசீலா, கள்ளக்குறிச்சி.

திருக்குறள் படித்திடத் தெளிவுமிகும்
கருத்துடைத் தொழிலெமும் கணினியினால்
விரும்பிடு நிலைவளர் வெளியுலகம்
தரும்பல புகழ்திருத் தமிழகமே.
115. - வே. பிரபாகரன், சென்னை.

கருதிய கருத்தினை நயம்படவே
உருவமைத் தினியதாய்க் கூறிடவே
கருத்தினைக் கவினுற வடிப்பவரை
உருவெடுத் திடச்செயும் நற்றமிழே!
116. - தி. உசா, திருவாமாத்தூர்.

விழிமலர் பூத்திட விளங்கிடுவார்
பழியிலா வாழ்வினில் திகழ்ந்திடுவார்
கழிமிகு செல்வமும் வழங்கிடுவார்
வழியதே பாரினில் சிறந்திடுமே!
117.- புலவர் உலோ. சுப்பிரமணயன், சென்னை.

மதுவினை மாய்த்திடப் போரிட்ட
மதுகையர் காந்தியைப் பாராட்டி
மதுவையும் விற்றிடும் அரசாங்கம்
எதற்கென எண்ணுதல் தவறாமோ?
118. - பு. சித்திரா, கரூர்.

மறவினை, கரவுகள், செருக்கோடு
புறணி,பொய், களவுகள், பொய்வாழ்க்கை
குறைபடும் செய்கைகள், அழுக்காறு
நிறைந்தவர் நடுவினில் வாழ்கின்றோம்!
119. - ச. தேன்மொழி சண்முகம், கரூர்.

பிணிகளில் உழன்றிடும் பெருமக்காள்!
கனிகளைக் காய்களைத் தேங்காயை
இனியதேன் கீரையை இயல்பாகக்
கனிவுடன் உண்குவீர்! பிணிநீங்கும்!
120. - புலவர் மு. குறளகன், கருவூர்.

ஒருவரே யிருபெயர் வைத்திருப்பார்
ஒருபெயர் தமிழனாய் நடித்திடஇன்
னொருபெயர் அவர்மொழி காட்டிடஇக்
கருமன நரிகளால் வரும்துயரே!
121. - வீ. வில்வநாதன், வெங்காலூர்.

பொழுதொடும் எழுந்திடின் பொலிவுமனம்
பழமையைப் புதுமையைப் பரப்பிடுமே!
தொழுதிடும் வழுத்திடும் துணிவுமனம்
உழுதிடும் தொழிலவர் உழைப்புணர்ந்தே!
122. - த. முத்தமிழ், மயிலாடுதுறை.

தமிழொடு அயன்மொழி பயின்றுவிடின்
இமிழ்கடல் எனஅவன் முழங்குகின்றான்
அமிழ்தெனத் தமிழ்தனை மதித்தலில்லான்
உமிழ்ந்திடும் அவனையே உயர்மனமே!
123. - நா. தண்டபாணி, அம்பல்.

எழில்நிறை உயிரெனக் கலந்தாயே!
அழிவிலா நிலையினைப் பெற்றாயே!
அழிக்கவே முயல்பவர் அழிவாரே!
செழித்திடு வளர்ந்திடு என்தாயே!
124. - புலவர் ப. தேவகுரு, தேவதானப்பட்டி.

www.padippakam.com



உருவகப் படுத்தியே உயர்த்தியேதான்
பெருகிடும் இடர்களைப் பெயர்த்தெறியா(து)
அருகிடும் மனங்களில் ஆறுதல்கூ(று)
உருகிடும் தடைகளே உருண்டோடும்.
125.- திருமதி பாவை கண்ணதாசன், கூடுவாஞ்சேரி.

இலக்கணம் செழித்திட மாத்தமிழர்
இலக்கியம் அமைத்திவன் தந்திட்டால்
உலகிலே தமிழ்மொழி நிறைந்திடுமே
உலகமே தமிழரை வாழ்த்திடுமே.
126.- முத்தமிழ் நண்பர்கள், தி.கொ.அ.க.கல்லூரி.

கனவுதான் நினைவினைச் சுமந்திருக்கும்
நினைவது கனவினை நிலைப்படுத்தும்
வினையதே வழிதனை வகுத்துவிடும்
மனதிலே உறுதிகள் இருந்திடினே.
127. - வி. கோபாலகிருட்டிளன், திகொ.அ.க.கல்லூரி.

இலக்கியம் பலப்பல கற்றுணர்ந்தே;
இலக்கணம் பலப்பல ஆழ்ந்துணர்ந்து;
நலமுடன் அருந்தமிழ் தனைக்காப்போம்!
பலமுடன் புவிதனை வாழவைப்போம்!
128. - இரா. சுடர்வண்ணன், சிதம்பரம்.

கனிவுடன் முகம்தனைக் கொண்டேதான்
கனியெனும் தமிழினைப் பேசிடுவோம்!
இனிமையில் தரையினில் வாழ்ந்திடவே
இனிஒரு தனிவழி காட்டிடுவோம்!
129. - கவிஞர். வேங்கடவரதன், பனங்குப்பம்.

முயலுக எதிலுமே மானிடரே!
முயன்றிடின் பெறுவன வெற்றிகள்தான்
முயலென இருப்பதில் உயர்வில்லை!
முயலுக உயருக ஆமையென!
130. - இரா. நிலவழகன், பனங்குப்பம்.

குறிளதன் ஈற்றடி குறுகியதாம்
சிறந்திடக் காட்டிடும் சீர்வழியை!
அறம்பொருள் இன்பமும் அறிந்திடுநீ!
திறம்பட வாழ்ந்திடு திருக்குறளால்!
131. - மணிமேகலை குப்புசாமி, குறிஞ்சிநகர்.

மலைதலை தோன்றிஇம் மாநிலத்து
நிலைதனை வளமிட நீண்டுபல
தலைமுறை வாழ்த்தொடு தவழ்ந்தோடி
அலைகடல் சேருநல் ஆறுகளே!
132. - கவி. சக்கர கண்ணபிரான், சென்னை.

மொழியொடு செறிநிகர் அழகாலே
மழையொடு முகில்தவழ் வரையாலே
அருளொடு கொடைதரு முறையாலே
பொருளொடு கொலுவிரு நறுந்தமிழே!
133. - ஆறு. தமிழ்நிதிவேந்தன், காரைக்குடி.

மொழியினை வளம்பெறத் துணைபுரியும்
வழியுடன் வளம்வரும் தமிழினமே!
தமிழினில் பெயரினை இடுவதினால்
கமழ்ந்திடும் உலகினில் தமிழ்மணமே!
134. - த. கோபால், பாலி.

திடமுடன் தமிழரும் திகழ்ந்திட்டால்
உடைபடும் பகையதும் ஒற்றுமையால்
தடைகளும் இலாமலே தமிழ்வளரும்!
கடையரும் கழிதலைக் காண்குவமே!
135. - சா. கண்ணன், புதுவை.

எழில்மொழி இனத்திலே பிறந்தாலும்
விழிமொழி நவிலுதல வெட்கமாநீ
கழிந்திடும் அழுக்கொடு கந்தலான
பழிவிழும் உடையினை உடுத்துவாயோ!
136.- பாவலர் மு. தமிழ்நிலவன், ஐயன்குடிப்பாளையம்.

விடியுமுன் எழுந்திடு, விதியெனுந்தீ
நொடியினில் குளிர்ந்திடும், நுவல்கடமை
படிமிசை முறைப்படி பகுத்தியற்றின்
வடிவுடன் பொலிவுடன் வாழ்வையே!
137. - கவிஞர் து. சுப்பராயலு, பெரியகுளம்.

எமதரும் மொழிக்கிணை இவ்வுலகில்
எமதரும் மொழியதே வேறில்லை!
எமதரும் மொழியதைக் காப்பதுவே
எமதரும் நற்பணி! நற்பணியே!
138. - பா. கல்பனா, பழைய கருவாட்சி.

எழுவதும் நடப்பதும் இன்றமிழே!
தொழுதுயர் வேற்பதும் தொல்தமிழே!
பழுதுற மிளிர்வதும் பைந்தமிழே!
முழுதுற இனிப்பதும் முத்தமிழே!
139. - சே. வானதி, பழைய கருவாட்சி.

பணிவொடு நாள்தொறும் தமிழ்மொழிந்தால்
நனிதரும் நலம்மிக நீர்பெறுவீர்
இனிவரும் பொழுதினில் மனதினிலே
பனிவுறு கனித்தமிழ் பயின்றிடுவீர்!
140. - "சங்கமம்" கணேசன், சிதம்பரம்.

சிலையெனப் புகழ்ந்துனைக் கவிவடிப்பான்
விலைமக ளெனஇகழ்ந் ததைமுடிப்பான்
தலைவியே எனஉனை அழைத்திடுவான்
தலைவனா? இலையவன் விலைமகனே!
141. - மு. அருணகிரி, பாதூர்.

விடுதலை வேண்டிடும் பெண்டிர்தாம்
படுதுயர் கேட்டிட நாதியிலை
கெடுதலை நீக்கிடும் ஒதுக்கீட்டைக்
கொடுத்தலை செய்திட மறுக்கின்றார்
142. - இரா. பாரதிராசா, புதுவை.

www.padippakam.com



இறையது நினக்குளே இருக்கையிலே
இறைவனைத் தேடியே ஓடுவதேன்?
முறையுடன் வாழ்ந்திட அவன்வருவான்
குறைகளைக் களைந்திட வரந்தருவான்!
143. - க. செயந்தி, கோலியனூர்.

அழகினுக் கழகெதாம் அவனியிலே?
குழவியின் குறுகுறு நடையதுவே!
குழலினும் யாழினும் இனியதெது?
குழவியின் அமிழ்துறு மழலையதே!
144. - பா. கலைச்செல்வம், விழுப்புரம்.

உலகினிற் குணர்வுடன் உழைத்தவரோ
சிலரிழி செயல்களால் விண்ணடைந்தார்!
நிலஉல கினில்அவர் கருத்தினைநாம்
துலக்கமாய்ச் செயல்படச் சூளுரைப்போம்!
145. - கு. அம்மச்சி, ஆத்தூர்.

சிறியதாய் இருப்பினும் தீப்பொறியும்
பெயரிதாம், இருளினில் மாப்பொறியாம்
நெறியினில் பெரியவர் ஒரிருவர்!
அறிவைநீ இப்புவி உய்யுமென்றே.
146. - காஞ்சி சாந்தன், காஞ்சிபுரம்.

உணவதைச் சேர்த்திட நலமில்லை
பணமதைச் சேர்த்திட நிலையில்லை
குணமதைச் சேர்த்திடக் குறையில்லை
உணர்ந்திடு, நலம்தரு இலக்காமே!
147. - சோ. கனிமொழி, புதுவை.

நினைவினில் நின்றதும், நீள்கடலில்
கலத்தினில் செல்வதும், களிவாழ்வை
இலங்கிடச் செய்வதும், இன்னலின்றி
நலத்தினைப் பயப்பதும் அறிவாமே!
148. - ஆ. அறிவரசன், புதுவை.

நடித்திடல் வாழ்வினில் தீங்காமே!
குடித்திடல் பண்பினில் தாழ்வாமே!
படித்திடல் குறளினை வாழ்வாமே!
மடிதனை நீக்கிடு, வெல்வாயே!
149. - சோ. அருமை சுந்தரி, புதுவை.

நதிதனை நிரப்பிடின் வளமாகும்
மதிதனைப் பெருக்கிடின் நலமாகும்
துதிதனைக் குறைத்திடின் சால்பாகும்
விதிதனை வென்றிடின் வாழ்வாகும்.
150. - சோ. இளஞ்செழியன், புதுவை.

நிலவினில் மனிதனும் குடியேறப்
பலமுறை முயல்கிறான் பயன்பெறவே
உலகினர் நிகழ்த்திடும் ஆய்வினிலே
பலன்பெற வேண்டுமே பாரினிலே!
151.- முனைவர் வே. முத்துலக்குமி, திரு.பள்ளி.

உனக்கெவன் வைப்பினை வைத்திட்டான்?
உனக்குள உறவினைப் பழிக்காதே!
இனமெனும் நல்லவர் பகையானால்
கனவினும் நல்லது சூழாதே!
152. - சி.பா. செல்வம், கோலியனூர்.

துறைதொறும் துறைதொறம் இடஒதுக்கு!
பறையடி பறையடி உரிமைக்கே!
முறையிலாத் தீர்ப்பினை முடியடிக்க
முறையொடு போர்தொடு உரிமைக்கே!
153. - புலவர் சி. வெற்றிவேந்தன், பாகூர்.

எனக்கொரு வேலையும் கிடைக்காதோ?
கனவுடன் பெயரினைப் பதிந்திட்டேன்
மனம்நிறை ஆர்வமும் மண்ணாகித்
தினந்தினம் போவதை யாரறிவார்?
154. - அர. நதியா, பனமலைப்பேட்டை.

அயர்வற உழைப்பவர் மனத்தில்நல்
வயமுடன் வாழ்ந்திடின் இவ்வுலகத்
துயரெலாம் நீங்கியே என்றென்றும்
உயர்நலம் பெற்றுநன் னிலையடைவர்.
155. - க. அன்புக்கோகிலா, செஞ்சி.

உளமகிழ் செயலினில் உளம்பதிப்பாய்!
வளமிகு நறுந்தமிழ் புரந்திடுவாய்!
களமெனில் படைமுதல் அணிவகுப்பாய்!
இளமையில் அறவழி நடந்திடுவாய்!
156.- இரா. அருமருந்தலைவன், திருமருகல்.

திரையினில் மூழ்கிய தலைமுறையே
தரையினில் வீழ்ந்திடும் மீனினமோ!
இளமையின் வேட்கையில் பேரலையாய்,
விளக்கினில் வீழ்ந்திடும் பூச்சிகளோ!
157. - அருள்நிதி, நெய்வேலி.

வளமிலா வாழ்வினை தகர்த்திடவே
உளந்தனை சிவனிடம் ஆழ்த்திடுவாய்!
இளங்கலைத் தமிழினை இசைத்திடவே
அளவிலா இன்பமும் பொங்கிடுமே!
158. - க.ச. மூர்த்தி, திருமுதுகுன்றம்.

கனிமொழி நானுனைக் காதலித்தேன்;
இனிமொழி இலையென இகழ்ந்துரைத்தாய்;
நனிதுயர் படுமெனை அறிந்திலைநீ
பனிபடு பயிரெனப் பசையற்றேன்.
159. - வே.ச. திருமாவளவன், சென்னை.

கடற்கரை மணல்திடல் சிதைந்ததுவே
படகுகள் நிலத்தினில் பெயர்ந்தனவே
திடமனம் உடையரும் பதைத்தனரே
கடல்தரும் மகிழ்ச்சியும் குறைந்ததுவே.
160. - ச. அருள்நேரு, கடலாடி.

www.padippakam.com



விலங்குடன் விண்ணளக்கும் பறவை
துலங்கிட நாமணி துணிமணிகள்
விலக்கியே வாழினும் அழகுண்டு!
புலைமன மாந்தனுக் கழகுண்டோ?
161. - த. குமாரசாமி எசுதர், கருவூர்.

கிழவனாய் ஆவதும் தவறென்பேன்!
கிழவியாய்ப் போவதும் தப்பென்பேன்!
குழவியாய் எப்பவும் நாமிருப்போம்!
இழப்பிலை; துயரிலை; எந்தநாளும்!
162. - இர. அசுவின் - ஆர்த்தி, தெள்ளார்.

ஒருதுளி மஞ்சளும் குங்குமமும்
ஒருமுழப் பூவுடன் கந்தலையும்
திருவென நினைப்பவள் கற்புடையாள்!
திருமகள் வாழ்ந்திடும் குலமகளாம்!
163. - த. இராசலட்சுமி, கடலி.

பிறப்பதின் பயனதே ஈவதாகும்!
உறவதின் உயிரது காப்பதாகும்!
அறமதின் சிறப்பது பிள்ளையாகும்!
இறப்பிலா வாழ்வதே வாழ்வுமாகும்!
164. - ஒளிவண்ணன், பனங்குப்பம்.

நலமிகு பழக்கமாய் நடைப்பயிற்சி
கலகல உணர்வுடன் கடைப்பிடித்தால்
வலிதரு இடமுள வலிவிலகும்!
நலிதரு நோயெலாம் நசிந்திடுமே!
!65.- புலவர் திருக்குறள் நாவை. சிவம், மணற்பாறை.

சிறகுகள் விரிந்தன தமிழாலே!
சிறப்புகள் வருதலும் கவியாலே!
உறவுகள் இணைந்திடல் அன்பாலே!
திறம்பட இருப்பது கந்தனாலே!
166. - மு. ஆனந்தன், திரு.கொ.அ.க.கல்லூரி.

மலருடன் இணைந்திடும் நறுமணமே!
நலமொடு புவிதனில் சிறப்புறுவோம்
மலையென அழிவிலாப் புகழுடனே
சிலையென உலகிலே வாழ்ந்திடுவோம்.
167. - க. இளமதி, திரு.கொ.அ.க.கல்லூரி.

மலரினால் செதுக்கிய பொன்னுடலே
நிலவினைப் போன்றன உன்கண்கள்!
நிலங்கனே சுமையென நினைக்குமாயின்
நலங்களை இனிமையாய்த் தந்திடுமோ!
168.- கே.கு. வீரவேல், திரு.கொ.அ.க.கல்லூரி.

மலைதரும் அழகென வந்தாய்நீ
கலைதரும் கற்பனை என்னுள்நீ
நிலைதரும் அன்பினைக் கொண்டாய்நீ
அலைகடல் நெஞ்சிரு அன்பேநீ.
169. - வ. அரிதாசு, வெங்காந்தூர்.

தமிழினில் பேசிடான்; தகுதிமிகு
தமிழினை மதித்திடான்; தகுதியிலாத்
தமிழ்எனப் பழித்துமே தமிழழிப்பான்;
தமிழனின் பிறப்பிலை தாழ்பிறப்பே!
170. - ஆர்க்காடு, அமுதோன்.

தமிழிலே படித்தவர் தழைத்திடவும்
தமிழிலே எதையும் வடித்திடவும்
தமிழிலே சாதனை படைத்திடவும்
தமிழரே எம்படை அணிசேர்வீர்
171. - சோழமாமல்லன்,

குறளுடன் உனதுளம் உருகட்டும்
அறத்துடன் அன்புளம் பரவட்டும்
உறவுடன் உய்தியிங் குலவட்டும்
திறத்துடன் நன்னெறி நிலைத்திடுமே!
172. - கடலூர் சிவராமன்.

புவியதில் நிறைந்திடுங் காற்றெனவே
தவித்திடும் உணர்வுகள் ஊற்றெடுக்கக்
குவிந்திடுந் தணலென வேதனையில்,
கவிந்திடும் நினைவுகள் காதலென்பார்!
173. - இராச. தியாகராசன், புதுவை.

மயிலென ஆடிடும் மலர்க்கொடியோ?
குயிலெனப் பாடிடும் குலமாதோ?
கயிலைவாழ் பார்வதி தன்மகளோ?
உயிரினும் மேலுனை விரும்புகிறேன்!
174. - பொன். பசுபதி, புதுவை.

எழுந்துவா! தமிழனே! தமிழ்காக்க!
விழுந்திடும் தமிழ்மொழி தரம்காக்க!
கொழுத்துவிட் டெரியுதே தமிழ்நெஞ்சம்!
அழுந்திகி டப்பதோ? அலையெனவா!
175. - ப. நீலா, புதுவை.

இனித்திடும் தமிழ்மொழி வளரவேண்டும்
தனித்தமி ழெங்குமே தழைக்கவேண்டும்
கனித்தமிழ் வாயெலாம் கமழவேண்டும்
முனைப்புடன் தமிழைநாம் பயிலவேண்டும்.
176. - ப. வனிதா, புதுவை.

எனதுயிர் நண்பனே நலந்தானா?
உனதுயிர் தந்தையும் தாயுமிங்கு
மனத்துய ரின்றியே வாழ்கிறார்கள்
நனிபணி யாற்றிடு! கவலற்க!
177. - ப. பிரபாவதி, புதுவை.

அயர்வுவந் துதாக்கிய தோபிரியா
உயர்மனம் பெற்றுநீ வாழலாமே!
உயிர்பிரிந் துபோனதே ஏனம்மா!
துயரமே தாங்கிடுந் திடனிலையோ!
178. - அ. செயமூர்த்தி, தென்நெற்குணம்.

www.padippakam.com



கனிகளும் கறிகளும் விற்பதனால்
கனிந்திடும் பொருட்குவிக் கலாம்
நனிதரும் கல்வியை விளம்பரத்தால்
மனிதநே யமின்றியே விற்கலாமோ.
179. - மு. அமிர்தகடேசுவரர், திருச்சிராப்பள்ளி.

தமிழ்மொழி செம்மொழி எனுஞ்சிறப்பை
அமிழ்தென அடையினும் ஆங்கிலத்தைத்
தமிழ்ப்பெயர் முன்பொரு தலைப்பெழுத்தாய்த்
தமிழரும் இடுவது நன்றாமோ?
180. - கோ. அர்ச்சுனன், சென்னை.

வெறியுறு நாயினால் கடிபட்டான்
அறிவிலார் சொல்வழி மந்திரித்தான்
முறையுடன் மருத்துவம் பெறாததனால்
வெறிமிகக் குரைப்புடன் உயிரிழந்தான்.
181. - கூத்தரசன், புதுவை.

கலைபயில் போதினில் கன்னியர்கள்
தலையினில் முடியெலாம் தடுமாற
கலையதும் உடலினில் நிலைமாற
நிலையினில் மேய்ந்திடும் வெறிமகள்போல்.
182. - மோ. கலாபன், சின்னசேலம்.

உணாவினை ஏய்ப்பவர் யாரேனும்
குணாம்புதல் செய்துமை இழிவாக்கும்
கணாதனை ஆயினும் பாராமல்
பிணாவுடைப் போர்த்துவாய் பெருமகனே!
183. - திருமதி. பெரியம்மாள் மோகன், இரிசிவந்தியம்

தமிழ்மொழி உணர்வுதான் தழைக்கட்டும்!
தமிழ்நலம் காக்கவே உழைத்திடுவோம்!
தமிழ்நிலம் விடுதலை பெற்றிட்டால்,
தமிழ்மொழி, தமிழினம் வாழ்ந்திடுமே!
184.- அன்புவாணன் வெற்றிச்செல்வி, காஞ்சிபுரம்.

மதுவினைச் சூதினைப் புகையினையும்
ஒதுக்கியே வாழ்பவர் உயர்விடத்தில்
செதுமொழி செவியிடம் சேராது
புதுமையே பொலிந்திட வாழ்ந்திருப்பர்.
185. - க. திருக்குறள் அமுது, கல்லக்குறிச்சி.

தமிழகம் ஆண்டிட வருவோர்கள்
தமிழினில் நிறைநிலைப் புலவோரை
உமியெனக் கருதிடும் புன்நெறியர்
உமிழ்வினைச் செய்திடக் கோலோச்சல்.
186. - தமிழடுக்கம், கல்லக்குறிச்சி.

பழகிய நாள்களை மனம்பதியார்
அழகிய பண்பினை மனங்கொள்ளார்
வழலையாய் உரிமையைக் கேட்டறியார்
மழலையாய்த் தோன்றிடக் கரிக்கொள்வார்.
187. - க. திருக்குறள் அரசு, கல்லக்குறிச்சி.

அசைவளி தந்திடும் இன்பினிலும்
இசைநிலை கொடுத்திடும் முத்தமிழன்
பசைநிலை அறிந்திடாப் பாழுடலோன்
வசைநிறை உற்றவன் மண்சுமையே!
188. - தமிழ்த்தேனீ, கல்லக்குறிச்சி.

அறிவினைப் பெருக்கிடும் ஆசானின்
குறியது பெற்றிடும் பணத்தில்தான்
நெறியுடை வாழ்விலா இவர்களிடம்
நெறியினை மாணவர் பெறுவாரோ?
189. - க. திருக்குறட் பாவை, கல்லக்குறிச்சி.

கலைபயில் மகனவன் இளம்போதில்
தலையினை நோக்கிடின் முட்பன்றி
கலையினில் தொலைவினில் ஐயவினா
மலையென மதித்தவர் இலவுகிளி.
190. - மோ. கலாநிதி, மேல் ஒலக்கூர்.

உலக்கையை உறுதியாய்க் கைக்கொண்டே
வலஇடக் காலினை வலுவூன்றி
உலவையின் பயிற்சியும் உரமாக
உலர்ந்திடப் பண்டியும் நெல்குற்று.
191. - அ. தமிழ்மரபன், கல்லக்குறிச்சி.

உருவினில் பெரியவர் என்றிடினும்
திருவினில் உயர்ந்தவர் ஆய்விடினும்
தருபவர் பிறர்க்கிடர் என்றாலே
கருவறப் போவது நிச்சயமே!
192. - கி. தசரதராமன், கடலி.

எனதுயிர் தாய்மொழி தமிழினையே
மனதிலே என்றுமே நிறுத்திடவே
தினமுமே கற்றிடக் குறளினையே
மனதினை வைத்திடும் செழுமையினாய்!
193. - க.அ. தமிழ்மரபன், கல்லக்குறிச்சி.

கனவிலே தீமைகள் நினைத்தாலும்
சினத்தொடு வந்துநான் தகர்ப்பேனே
நனவொடு இன்றுநான் உரைக்கின்றேன்
எனதுயிர் என்றுமே தமிழினிலே
194. - த. மணிகண்டன், திரு.கொ.அ.க.கல்லூரி.

செருக்கினைப் போக்கிட எந்நாளும்
திருக்குறள் போற்றுக உன்வாழ்வில்
அருந்தமிழ் நூல்களைத் தேருதற்கு
விருப்பினைக் கொண்டிடு மகிழ்வுற்றே
195.- வே. ம. பாலகிருஷ்ணன், திரு.கொ.அ.க.கல்லூரி.

கனிகளில் சுவைதரும் கனிபலவாம்
பிணிகளில் நலந்தரும் பிணியிலையாம்
இனிவரும் உலகினில் இனிப்பிலையாம்
தனிமையில் இருந்திடச் சிறப்பிலையாம்
196. - ம. கேசவன், மீஞ்சூர்.

www.padippakam.com



திருந்திய செந்தமிழ் இனிப்பிருக்க
அருந்திடில் கசந்திடும் பிறமொழியேன்
வருந்திடப் படிக்கிறார் மழலையு;நம்
புரிந்திதைக் கொண்டிடில் நன்மையே
197. - செ.அ. கார்க்குழலி, ஒடாக்கநல்லூர்.

பலமுறை என்பணி செய்திடவே
சிலமுறை என்னிலே வெற்றியுண்டு
சிலமுறை செய்யவே வெற்றியென்றால்
நலமுடன் என்பணி தொடர்ந்திடுவேன்.
198. - தி. உருபன், விழுப்புரம்.

உழைத்தவர் நலிந்திட விடலாமா?
பிழைத்திடு வோரெலாம் பெரியாரா?
தழைத்தறம் ஓங்கிடச் செய்வோரே
அழைத்துளம் போற்றிடும் நல்லோரே
199.- புலவர். அ. சான்னையன், புலிகரம்பலூர்.

இருந்திடும் காவலர் கள்வரானால்
இருந்திடு மாஅறம்? இனிதிருந்து
பொருந்திடு மாப்புகழ்? பொறுப்புணர்ந்து
திருந்திடு வாரெனில் சீரதாமே!
200. - இலெ. அ. அகத்தியன், சிறுமிளை.

மிகுத்திவண் ஒற்றுமை மேலெனவே
பகுத்துரை பரப்பினைப் பாங்குறவே!
தொகுத்தவை தொலைத்துடன் தோய்கரவில்
புகுத்திய சாதியைப் போற்றுவதோ?
201. - விழுப்பை வேல், விழுப்புரம்.

உரியதம் மொழியினைப் புறந்தள்ளி
அரியதாம் கல்வியைப் பெறநினைப்போர்
கரியதாம் இருளிலே கைவிளக்கில்
உரிஞ்சலில் நுண்பொருள் தேடலற்றே.
202.- புலவர் அய்யா. மோகன், கல்லக்குறிச்சி.

கருமுகில் தருமழை கருணையும்
திருமுகம் எழில்தரும் தெரசன்னை
கருமமும் கடனதும் செய்துயர்ந்தே
ஒருமலர் புகழ்தனில் நிலைத்துவே.
203. - நட. இராமமூர்த்தி, புதுவை.

கடல்வழி சுருக்கிடச் செயல்முனைந்தார்
மடப்பயல் வெடித்திடத் திட்டமிட்டான்
கெடல்உளம் உடையவன் கெடுமதியன்
அட !இது நன்றிதோ? அறிந்திடுவீர்!
204. - அரு. மணிவாசகன், திருமருகல்.

தமிழ்மொழி முதலென உரைத்திடுவோம்
தமிழ்மொழி இனிதெனச் சுவைத்திடுவோம்
தமிழரைத் தலைவராய் ஆக்கிடுவோம்
தமிழினம் உயர்ந்திட மகிழ்ந்திடுவோம்.
205. - க. அரசு, பெங்களூர்.

முதல்தர மானவர் கருத்துரைப்பர்;
அதற்கடுத் துள்ளவர் நிகழ்வுரைப்பர்;
கதிகெடத் தனிமனி தனைக்குறித்தே
விதவிதம் உரைப்பவர் கடைநிலையர்!
206. - பேரா. கி. சிவகுமார், விருத்தாசலம்.

விழியிலை என்னுமே வீழவில்லை!
பழியது பகன்றுமே தாழவில்லை!
இழிநிலை இரந்துமே ஏற்கவில்லை!
விழைவுடன் வெளிச்சமாய் ஒளிர்கின்றார்!
207. - கோ. வெற்றிச்செல்வி, சென்னை.

## சென்ற இதழில் விடுபட்ட பாடல்

ஆனவரை தாய்த்தமிழை அகிலத்தில்
வானுயரச் செய்திடவே உணர்ந்தேதான்
ஊனுறக்கம் விட்டொழித்தே துடிப்போடு
மானமற வா !விரைந்தே எழுவாயே!
1. - அதலை இராமன், மதுரை.

தன்னலமும் ஆணவமும் தலைக்கேறி
இன்னலையே தந்திடுதல் இனிதாமோ?
முன்னியநற் கொள்கையின்வேர் முடங்காதோ?
அன்பினையே தீண்டிடுதே அரவுந்தான்!
2. - மணிமேகலை குப்புசாமி, புதுவை.

தேன்குறளை இன்னவையில் அமர்த்தாமை
தான் ஒருவர் தண்டமிழில் பயிலாமை
மானமுள்ள எம்மகனும் உணராமை
ஈனமுறு சிற்றறிவே! இடிந்துபோமோ!
3. - த. முத்தமிழ், மயிலாடுதுறை.

நற்றமிழின் பொற்றிறத்தால் தமிழ்வாழும்
கற்றவரின் நன்முயற்சி இனிதாகும்
பெற்றவரின் நற்பழக்கம் பெருமையே!
நற்றமிழின் சொற்சுவையே கூடிடுமே!
4. - கிசர்உசேன், செஞ்சிக்கோட்டை.

வாக்குறுதி கூறிடுவர் அதைக்கேட்டு
வாக்கினையும் தந்திடுவர் வருமுன்னர்
போக்கிடுவேன் காத்திடுவேன் வறுமைநோய்
நீக்கிடுவேன் என்பவரே கடுநோயாம்.
5.- மு. இரிகானாபேகம், செஞ்சிக்கோட்டை.

ஆடுகின்ற ஆட்டமெலாம் அடங்கும்நாள்!
கூடுகின்ற கூட்டமெலாம் குலைந்தேபோம்!
தேடிவந்த செல்வமெலாம் சிறப்பிழக்கும்!
ஓடிடுவார் தீந்தமிழின் ஒளியாலே!
6. - நா. தண்டபாணி, அம்பல்.

www.padippakam.com



# நற்றமிழ்க்கு வந்த நன்மடல்கள்

தமிழ்த் தேசியத் தலைவர் ம.பொ.சி அவர்களின் வீறார்ந்த நிழற்படந்தாங்கி வந்த மடங்கல் நற்றமிழ் மிகச் சிறப்பாக இருந்தது. 204 மரபு பாவலர் அணி நற்றமிழ்க்குப்பின் அணி வகுத்துள்ளமையறிந்து பெரும் பூரிப்படைந்தேன். ஆய்வறிஞர் அருளியார் எனக் குறிப்பிடப் படும் அவ் ஆய்வாளர் பற்றி என்னைப் போன்ற பாவலர்கள் தெரிந்திடும் வண்ணம் முழுக்குறிப்புரையை வழங்க வேண்டுகிறேன்.

(ப. அருளியார் சொல்லாய்வறிஞருள் முதல்வரிசையில் உள்ளார். புதுவையைச் சேர்ந்தவர். மொழிப் பேரறிஞர் பாவாணரோடும் தமிழ்ப் பெருந்தொண்டர் பெருஞ்சித்திரனாரோடும் நெருங்கிய பழக்க முடையவர். அவர் எழுதிய அயற்சொல் அகராதி, பெரும் பயன் தருவது. "அருங்கலைச் சொல்லகரமுதலி "உலகத் தமிழர்க்குப் பேருதவி புரியத் தகவுடைய நூலாகும். அவரால் வெளியிடப்படும் நூல்களெல்லாம் தமிழ்ப் போராளிகட்கெல்லாம் அரிய படைக்கலன்களாகப் பயன் படக் கூடியவை. அவரின் முகவரி : ஆய்வறிஞர் ப. அருளி, 6, காளி கோயில் தெரு, (தமிழூர்) திலாசுபேட்டை, புதுச்சேரி - 605 009.)

"நற்றமிழ் ஏட்டின் முகப்பில் மலர்ந்திட்ட பொற்றமிழ்ப் பாடல் மிக அருமை! - கற்றறிந்த பாவேள் புதுவைத் தமிழ்நெஞ்சன் பண்பாட் டைப் பாவேந்திப் போற்றும் முரசு". - **பாவலர் இடிமுரசார், சென்னை.**

மடங்கல் இதழில் தமிழர் தலைவர் ம.பொ.சியாரின் படத்துடன் தமிழ்த்தேசியத்தை ஆதரித்தும் திராவிட மாயையை எதிர்த்தும் எழுதியி ருப்பது பாராட்டிற்குரியது. திராவிட மாயையால்தான் சுதந்திர நாட்டின் மக்களாட்சியில் தாய்மொழி வளர்ச்சிக்காகப் போராட வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது. - புலவர் ஆ.வே.இரா, வை.செ.பாளையம்.

திருக்குறள் பெருமாள் இயற்கையெதினார் என்பதை நற்றமி ழில் கண்டேன். மிக வருத்தமுற்றேன். 1965 ஆம் ஆண்டு மணப்பட்டுச் சிற்றூரில் முதன் முதலில் அவரைக் கண்டேன். அது முதல் பல இடங்களில் பல சமயங்களில் அவரைக் கண்டிருக்கிறேன். திருக்குறள் பெருமாள் என்பதை விடப் "பாவேந்தர் பெருமாள்" என்க் குறிப்பிடுவதே பொருத்தமாகும். பாவேந்தரின் பாடல்களைத் தட்டுத் தடுமாறாமல் குழந்தைகட்குச் சொல்லிக் காட்டுவது போலச் சொல்லும் அந்தப் பாங்கு என் கண்ணே தோன்றுகிறது. அவரைப் போல் மற்றொருவர் கிடைப்பதரிது. - **முனைவர் வே.ச. திருமாவளவன்.**

தமிழர்தலைவர் ம.பொ.சியாரின் அட்டைப் படமும் செய்தியும் பேணிக்காக்க வேண்டியவை. தொடுத்தலும் விடுத்தலும் பகுதியில் க. இளஞ்செழியனின் சவுக்கடியான வினா. ஒவ்வொரு தமிழரின் நெஞ்சிலும் நீறுபூத்த நெருப்பாக இருந்து வருகிறது. அரசியலார் அனைவரும் நெஞ்சில் நிறுத்த வேண்டிய விடை தந்துள்ளீர்! தமிழ்க் குறளைச் செர்மன் மொழியில் பெயர்த்த அறிஞர் சுவைட்சர். அவர் பற்றிய செய்தி சுவை தந்தது. 'நூல் அறிமுகம்' பகுதியில் வெளியாகும் நூல் களைப் பற்றி இருபக்கம் அறிவித்தமை நற்றமிழின் விரிமனப்

www.padippakam.com



போக்கிற் குச் சான்று! மோனை அமைவது நல்லதென திரு. சனார்த்தனன் விளக் கியமை சிந்திக்கச் செய்தது. ச. சிவானந்தம் வரைந்துள்ள 'தமிழின் பேரில் ஒரு தமிழ்க்கொலை' அன்றாடம் நாமே சிந்தும் நம் குருதியின் சீற்றமாக இருந்தது. சேலம் ஊற்றுமலைச் செய்தி உண்மையிலேயே எம்மைப் பெருமிதம் கொள்ளச் செய்தது. பேராசிரியர் பசுபதியாரின் மடலில் நற்றமிழோடு மற்ற சிற்றிதழ் கைகோர்க்கும் கனவு நனவாகிடும் நாள் தொலைவில் இல்லை. ஏழாம் வகுப்பின் பழமொழிச் செய்யுளுக்கு ஆறுமுகனாரின் விளக்கம் அருமருந்தாக அமைந்தது. - சு.வே, சேலம்

நற்றமிழ் மடங்கல் இதழில், கரூர் க. இளஞ்செழியன் அவர்களின் வினாவிற்கு, விடையாக, திராவிடம் என்று சொல் தமிழரை ஏமாற்றவே பயன் படுகின்றது என்பதனை அழுத்தமாகச் சொல்லியுள்ளீர்கள். "தமிழின் பெயரில் ஒரு தமிழ்க்கொலை" என்ற தலைப்பில் திரு. இறையன்பன் எழுதியுள்ளது உடனடியாக செயல்படுத்த வேண்டிய கருத்தாகும், இதுபோன்ற ஊடகத்தின், பூடகமான செய்திகளைத் தடைசெய்தாலே தமிழ் தழைக்கும். பிழைக்கும். தணிக்கையாளர்களும், அரசும், மிக முனைப்போடு இவைகளைச் செயல்படுத்த வேண்டும். தமிழ்க்கொலையாளர்களை மக்கள் புறக்கணித்துத் தங்கள் ஒட்டுமொத்த உணர்வுகளைக் காட்ட வேண்டும். தமிழர்கள் அனைவர்க்கும் தன்மான உணர்வு வரவேண்டும். வருமா? நிச்சயம் வரும் என எதிர்பார்ப்போம்! - "காற்று" (எ) கலைவாணி கிருட்டினன், கோவை.

நற்றமிழ் 2036 மடங்கல் இதழ் படித்தேன். இதழின் முகப்பு தமிழ் நிலத்தின் உரிமைக்குப் போராடித் திருத்தணியை மீட்டிட்ட போராளியான சிலம்புச் செல்வர் ம.பொ.சியின் அட்டைப் படம் அழகா அல்லது புதுவைத்தமிழ் நெஞ்சனின் பாடல் அருமையா? இரண்டும் அழகாய் அமைந்திருந்தன. தமிழர்களை ஏமாற்றப் பயன்படுத்தும் சொல் திராவிடம். தமிழர் நாட்டில் தமிழர் அல்லாத திராவிடர்கள் கொட்டமடிக்கத் திராவிடம் என்னும் கோட்பாடு உதவுகிறது. அந்தப் பொல்லாத திராவிடத்தைக் கருவறுக்க ம.பொ.சியை முன்னிருத்தித் தமிழர்கள் தெளிவடைய வேண்டும். இதை அருகோவின் வரிகளில் சொல்வதென்றால் "ம.பொ.சியை மறந்தால் தமிழினத்திற்கு உய்தி கிடையாது, ம.பொ.சியை விட்டால் தமிழ்த் தேசியத்திற்குச் செய்தி கிடையாது". - அருவை. தமிழன்பன், அருப்புக்கோட்டை.

தமிழைச் செம்மொழியாக நடைமுறைப் படுத்துவதில் நடுவண் அரசு இன்னும் ஏனோ தயக்கம் காட்டிவருகிறது! அதற்கு மக்களின் வாக்கு வங்கி மட்டுமே குறிக்கோள்; தமிழ் மக்களின் தாய்மொழி அவர்களின் கண் எதிரிலேயே களவு போய்க் கொண்டிருக்கிறது. மக்களனைவரும் ஒருங்கு கூடி வாக்களிக்க மறுத்தாலொழிய செம்மொழியாகத் தமிழ்மொழி நடைமுறையில் அரங்கேற முடியாது. மக்களின் செம்மாந்தவிழிப்புணர்வே செம் மொழியை வாழச்செய்யும். - ஆறு. தமிழ்நிதிவேந்தன்.

ஆகத்து மாத இதழில் அட்டையில் ம.பொ.சி படம் அலங்கரித்தது எம் தமிழ் அன்னையை தங்க மயிலாசனத்தில் அமர வைத்த பெருமையை நிலைநாட்டியிருந்தது. பெருங்கதையும் சீவகசிந்தா

www.padippakam.com



மணியும் என்ற ஒப்பாய்வு தொடர்ந்து படித்து வருகின்றேன். ஒவ்வொரு தமிழ்க் குடிமகனும் படிக்க வேண்டிய ஒன்று இது. இலக்கணத்தை எளிமைப் படுத்தும் நற்றமிழ் இதழ் தமிழ் மொழி வளர்ச்சிக்குத் தேவை. செந்தமிழ் வளர்க்கும் செய்தி படித்துத் தான் ஒவ்வொரு உரையிலும் தமிழர்களின் முகவரி முகம் காட்டுகிறது. நம் நற்றிமழில் கொடுத்தபடி தொடுத்த பாடல்கள் தலைப்பில் எத்தனை கவிக் குழந்தை நெஞ்சம் நெகிழ்ந்து போகின்றேன்.

- கீரங்குடி கவிஞர். வெள். வெங்கடராமன், இராணிப்பேட்டை.

அட்டையில் தமிழினப் போராளி ம.பொ.சியின் படத்தை வெளி யிட்டுச் சிறப்பித்தற்குப் பாராட்டுகள் உரியதாகுக. தொடுத்தலும் விடுத் தலும் பகுதியில் இந்திய நடுவண் அரசின் செம்மொழி துரோகத்தைச் சுட்டிக் காட்டியுள்ளது வரவேற்கத் தக்கதாகும்! திராவிடம் என்ற சொல் லின் முகமூடியைத் தாங்கள் அறிவியல்பூர்வமாகக் கூறியிருப்பது மகிழ்வை வழங்குகிறது.

கண்ணதாசன் அவர்களின் தென்றல் இதழிற்கு அடுத்து நற்றமிழ் இதழ் செய்யுள் இலக்கணத்தைப் பரப்புவது கண்டு மகிழ்ச்சி அடைந் தேன். தமிழ்த் திரைத் தொலைக்காட்சியினரைக் கண்டித்திருப்பது சரியாகும். இதழின் ஆசிரிய அகவுரை அவசியம் இருத்தல் வேண்டும்.

இரண்டு திங்களாக நற்றமிழ் இதழைப் பார்க்கக்கூட முடியவில்லை. கல்லூரி முகவரிக்கு அனுப்பினால் எனக்கு வந்து சேர வில்லை. என் விடுதியின் முகவரிக்கு அனுப்பினால் எனக்கும், எங்கள் தமிழ்த்துறைக்கும் பயனுள்ளதாக இருக்கும். நற்றிமிழ் இதழின் செய்தி களை அறிந்து கொள்ள என் தோழிகளும் விரும்புகின்றனர்.

- மு. சக்தி, மாணவர், சேப்பாக்கம்.

**புதுவைத் தமிழ் எழுத்தாளர் இயக்கத்தின் சார்பில்** 20-8-05 இல் நடந்த திருக்குறளைத் தேசிய இலக்கியம் ஆக்கக் கோரும் கருத்தரங்கில் படிக்கப்பட்ட 4 வரிப் பாடல்கள்.

எல்லா மதத்தரும் எல்லா இனத்தரும் ஏற்பதுவாய்
இல்லாத தில்லை இதனுள் எனும்புகழ் ஏன்றதுவாய்
நல்லாறு நல்கி நலஞ்செய் திருக்குறள் நம்மறையை
வல்லதோர் தேசிய வாழ்வியல் நூலென வாக்குகவே!

- புலவர் அரங்க நடராசன், இணையாசிரியர் 'நற்றமிழ்'

ஒருதாயின் மக்களென உலகில் வாழ்தல்
ஒற்றுமையை நிலைநிறுத்தி அமைதி காணல்
திருவெல்லாம் அனைவர்க்கும் பொதுமை யாதல்
திறனுடையார் தடையின்றிப் பணியற் சேர்தல்
திருடரெல்லாம் அரசியலை விட்டு நீங்கல்
திண்ணியராய் அலுவலர்கள் மாறல் எல்லாம்
திருக்குறளைத் தேசியநூ லாக ஏற்றால்
திடமாக இவ்வுலகில் நிகழுந் தானே!

- புலவர் மு. இறைவிழியன் ஆசிரியர் 'நற்றமிழ்'

www.padippakam.com



# நூல்-அறிமுகம்

**"குறள்நெறி ஒளிரும் முத்துக்கள்"** ஆசிரியர் : **திருக்குறள் நம்பி, தங்க பழமலை;** வெளியீடு : திருக்குறள் கழக அறக்கட்டளை, 150, தெற்கு தெரு, திருக்கோவிலூர் - 605 757; விலை : உரு. 60/-

திருக்குறளில் மூழ்கி எடுத்த முத்துக்களை மாணிக்கவாசகர், கம்பர், வள்ளலார், பாரதியார், பாவேந்தர் ஆகியோர் தம் நூல்களில் பதித்து ஒளிரச் செய்திருப்பதையும், பிற இலக்கியங்களில் ஒளிர் வதையும், நன்கு விளக்கியிருக்கிறார். நூலாசிரியர் "திருக்குறள் நம்பி" தங்க பழமலை. "கடை நிலத்தோர் ஆயினும் கற்றறிந்தாரைத் தலை நிலத்து வைக்கப்படும்" எனும் மனோன்மணியம் கருத்தை "மேற் பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும் கற்றார் அனைத்திலர் பாடு" எனும் குறளுடன் ஒப்பிட்டுக் காட்டியிருப்பது போல் நானூறு நன்முத்துக்களைக் கண்டெடுத்து மாலையாக்கிக் குறள் நெறியை ஒளிரச் செய்திருக்கிறார் நூலாசிரியர். இஃது ஓர் அரிய முயற்சியாகும்.

**"வேரின் விழுதுகள்";** ஆசிரியர் : **பாவலர் கருமலைத் தமிழா ழன்;** வெளியீடு : வசந்தா பதிப்பகம், 2/16.6, ஆர்.கே. இல்லம், வசந்த நகர், ஒசூர் - 635 109, கிருட்டினகிரி மாவட்டம். விலை : உரு. 60/-

இந்நூலில் மொழி, குமுகம், நேயம் என மூன்று மூல வேர்களில் 95 எழுச்சியூட்டும் மரபுப் பாடல்களை விழுதுகளாகப் படைத்திருக்கிறார் நூலாசிரியர் பாவலர் கருமலைத்தமிழாழன். "தனியாக ஒரு நாடு தமி ழர்க்கென்றே - தரணியிலே உருவாகும். குறளின் செங்கோல் இனிதாக வீற்றிருந்தே ஆட்சி செய்யும்; இருக்கின்ற துறைகளெல்லாம் தமிழைப் பேசும்" எனவும் "எழுவாய் இன்றே எழவில்லையேல் எருமைத் தமிழா தமிழழியும்" எனவும் தமிழ் மீதுள்ள பற்றினை அறந்திடா வேரின் விழுதுகளாகத் தமிழைப் போற்றித் தமிழுணர்வில்லாத் தமிழனைச் சாடியுமே பாடல்கள் உள்ளன. தமிழனுக்குத் தமிழுணர்வூட்டும் நூல்.

**"பாட்டோ? அமுதோ?";** ஆசிரியர் : **பாவலர் கோ. அன்புநிலவன்;** வெளியீடு : பாவலர் கோ. அன்புநிலவன் பதிப்பகம்; 12, பாவேந்தர் சாலை, வானவில் நகர், புதுச்சேரி - 605 011; விலை : உரு. 80/-

இந்நூலில் 69 பாடல்கள் உள்ளன. பாடல்கள் அனைத்தும் இன்றைய குமுகாயச் சீர்கேட்டினை எடுத்துக் கூறி நல்வழிப்படுத்து வதாக அமைந்துள்ளன. "மருத்துவர் தமை வெருட்டிடும் கல்வியை - மாந்தலே வெல்வழியாம்" எனக் கல்வியைப் பற்றியும், "தமிழ் மொழிக்கு வருந்துன்பம் நமக்குத் துன்பம் - தலைமுறைக்கு வருந்துன்பம் நாட்டின் துன்பம்" எனத் தமிழ்மொழியின் இன்றியமையாததைச் சுட்டிக்காட்டி உணர்த்தியிருக்கிறார் நூலாசிரியர் பாவலர் கோ. அன்புநிலவன், படிக்க வேண்டிய நூல்.

**"எட்டுமணி நேர வேலை, ஆசியாவில் முதல் வெற்றி";** ஆசிரியர் : **சிவ. இளங்கோ;** வெளியீடு : ஞாயிறு நூற்பதிப்பகம்,

www.padippakam.com



6, கவிஞர் புதுவைச்சிவம் வீதி, வெங்கட நகர், புதுச்சேரி - 605 011; விலை : உ௹. 70/-

இந்நூல் பஞ்சாலைத் தொழிலாளரின் வரலாற்று நூலாகும். புதுவை மண்ணில் ஆலைகளின் வரலாற்றுடன் தொடங்கும் இந்நூலில் பல போராட்ட நிகழ்வுகள் இடம் பெற்றுள்ளன. ஆசியாவிலேயே முதன் முதலில் எட்டு மணிநேர வேலையும் தொழிலாளர் நலன் காப்பதற்குச் சங்கம் அமைத்துக் கொள்ளும் உரிமையும் சட்ட மாக்கப்பெற்றது புதுச்சேரியில்தான் என்பதைச் சான்றுடன் நிறுவி இருக்கிறார் நூலாசிரியர் சிவ. இளங்கோ. கடின உழைப்புடன் துனிந்து இந்நூலை வெளிக்கொணர்ந்த நூலாசிரியர் பாராட்டுக்குரியர். பஞ்சாலைத் தொழிலாளர்களும் தொழிற் சங்கத்தாரும் அறிந்து கொள்ள வேண்டிய நூலாகும்.

**"சுமித்திரா சுனாமியும் இயற்கைப் பேரிடர்கள் விழிப்புணர்வும்"**; ஆசிரியர் : தகடூர் வனப்பிரியன்; வெளியீடு : பொதிகைப் பதிப்பகம்; 3/1330, வி. செட்டிபட்டிச் சாலை, தருமபுரி - 634 701; விலை : உ௹. 50/-

இந்நூலில் கடல்கோள், இயற்கைப் பேரிடர்கள் எதனால், எவ்வாறு ஏற்படுகின்றன? அவற்றின் அழிவில் இருந்து நம்மைக் காத்துக் கொள் வதற்குரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், விழிப்புணர்வு பற்றியும் மிகத் தெளிவாகப் பல படங்களுடன் இந்நூலைப் படைத்திருக்கிறார் நூலாசிரியர் தகடூர் வனப்பிரியன். பொதுமக்கள் படித்தறிந்து கொள்ள வேண்டிய பயனுடைய நூலாகும்.

**- புலவர் செ. இராமலிங்கன்.**

## திருத்தம்

நற்றமிழ் 15-8-2005 இதழில், மோனை அமைவது நல்லது! என்ற கட்டுரையில்

"மைசிறந்தன மணிவரை
கைசிறந்தன காந்தளும்
பொய்சிறந்தனர் காதலர்
மெய்சிறந்திலர் விளங்கிழாய்"

முதல் இரண்டு அடிகளிலும் நான்காம் அடியிலும் மோனைகள் அமைந்துள்ளன என்பதற்குப் பதிலாக, முதல் இரண்டு அடிகளில் மோனைகள் அமைந்துள்ளன எனக் கூறப்பட்டுள்ளது. புலவோர் பொறுத்தருள்க!

**- கவிஞர் தே. சனார்த்தனன்.**

# தமிழ்ப் பாதுகாப்பு இயக்கத்தின் சிறை நிரப்பும் போராட்டம்

**கன்னி ரு – செத்தம்பர் 21**

**உணர்வுள்ள தமிழர்களே! சிறை நிரப்புக!**

www.padippakam.com



# தொடுத்தலும் விடுத்தலும்

வினா - 1 : எங்குப் பார்க்கினும் (வலி மிகுந்து) "தொலைக்காட்சி" என விளம்பரங்களில் காண்கிறோம்; அதே சமயம் (வலி மிகாமல்) "தொலைபேசி" என விளம்பரங்களில் காண்கிறோம்! "தொலைக் காட்சி"க்கு வலி மிகும்போது, "தொலைபேசி"க்கும் வலிமிகும் அவசியம் உண்டல்லவா? ஆயினும், "தொலைபேசி" என்றே வலிமிகாமல் இயல்பாய்ப் புணரப்படுகிறது. நிற்க; 15-10-04ஆம் தேதியிட்ட "நற்றமிழ்" மாதவிதழின் பின் அட்டையின் அடியில், "தொலைப்பேசி" என அபூர்வ மாகப் புணர்த்தெழுதப்பட்டிருந்தது; ஆயினும், எம்மைப் பொருத்த வரையில், இவ்விரு தொடர்களையும், வினைத்தொகையெனக் கருதின், "தொலைகாட்சி","தொலைபேசி" என்றும், அய்ந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையெனக் கருதின், "தொலைக்காட்சி" "தொலைப்பேசி" என்றும் புணர்தலே இலக்கணப்படி சரியாகும் என எண்ணுகிறேன்; யாம் மேற்குறிப்பிட்ட "நற்றமிழ்" மாதவிதழில், அய்ந் தாம் வேற்றுமை உருபும், பயனும் உடன் தொக்கதொகை எனக் கருதியே "தொலைப்பேசி" யென எழுதினர் என்றே நினைக்கிறேன், ஆயினும், "தொலைக்காட்சி" "தொலைகாட்சி" "தொலைப்பேசி" "தொலைபேசி" என்பனவற்றுள் எவை இலக்கணப்படி சரியான தொடர்?

- பா. விசயகுமார், சென்னை.

விடை - 1 : உம் கருத்துச் சரியானதே. தொலைக்காட்சி மிகுதல் போலத் தொலைப் பேசியும் மிகுதலே முறையென்றுதான் நான் மிகுத் தெழுதுகிறேன். மிகாமல் எழுதுதற்குரிய காரணத்தை இன்றுவரை எவரும் எடுத்துக் காட்டினாரிலர். இப்பொழுது தொலைபேசினேன் என்று சிலர் எழுதிடக் காண்கிறேன். தொலைப்பேசியில் பேசினேன் என்ற தொடரே சரியாகும். தொலைக்கண்டேன் என்றால் தொலைக்காட்சியில் கண்டேன் என்ற பொருள்தருமா? சிந்தனையின்றித் தம்விருப்பம்போல் பயன்படுத்துவாரைத் திருத்துதல் இயலுமா?

வினா - 2 : வஞ்சிவிருத்தம் - 6

திருஉள ராம்ரகீம் ராபர்ட்போல்  
அறிவுடன் வாழநாம் பழகிடுவோம்  
ஒருமையை வாழ்த்திடும் இந்தியராய்  
இருப்பதால் தப்பிலை எம்மதமும்!

ராம், ரகீம், ராபர்ட்போல் இவை பெயர்கள். 'இ' மொழிக்கு முதல் தேவை இல்லை என்பது நவீன இலக்கண வளர்ச்சி எனக்கொள்க.

- பித்தளை வணிகன் மதுரைமாறன், திண்டுக்கல்.

விடை - 2 : வஞ்சி விருத்தம் பொருட்சிறப்புடனும் சீர்ப்பிழையின் றியும் அமைந்துள்ளது மாராட்டிற்குரியது. மரபு பாடலில் நல்ல பயிற்சி பெற்றிருப்பது மகிழத்தக்கது. பாடலில் பிறமொழி எழுத்துக்கள் கலவாமல் இருத்தல் எண்ணி எண்ணி மகிழத்தக்கது.

ஆனால் 'இ' மொழிக்கு முதல்தேவை இல்லை என்பது நவீன இலக்கண வளர்ச்சி எனக்கொள்க என்ற குறிப்பு மட்டும் முழுமையான தமிழ் இலக்கணப் பயிற்சியின்மையையே உணர்த்துகிறது. தமிழ் இலக்கணம் என்பது இயற்கையை அடிப்படையாகக் கொண்டது. நவீன

www.padippakam.com



காலத்துக்கு மட்டுமன்று அதிநவீன காலத்துக்கும் பொருத்தமாகும் வகையில் படைக்கப்பட்டதே தமிழிலக்கணம். உலகில் எந்த மொழிக்கும் ஏற்படாத பகைக்கேடுகள் உண்டான போதும் தாக்குப் பிடித்து இன்றும் வழக்கில் இருக்கும் மொழியாக வளர்ச்சிமிக்க மொழியாகப் பல்வேறு மொழிகள் தோன்றிட உதவும் மொழியாகத் தமிழ்மொழி விளங்கக் காரணம் அதற்கமைந்த மொழி முதல் எழுத்துக்கள், இறுதி எழுத்துக்கள், எழுத்து மயக்கங்கள் சொற்புணர்ச்சி ஆகிய அடிப்படை இலக்கணமேயாகும். தமிழிலக்கணத்தையும் பிற மொழியிலக்கணத்தையும் ஊன்றியும் ஒப்பிட்டும் படிப்பார் தெளிவடைந்து தமிழிலக்கணத்தின் சீர்மையை நாளும் பாராட்டுகின்றனர். மேலும் ராம் என்பது சமற்கிருதப் பெயர். ரகீம் என்பது அரபி மொழிப் பெயர் - ராபர்ட் என்பது ஆங்கில மொழிப் பெயர். பெயர்கள் எல்லாம் மொழி அடிப்படையில் அமைந்தவை. அறியாமையால் பலர் மத அடிப்படையில் அமைந்ததாகக் கருதிக் கொண்டு குழப்பமடைகின்றனர். ராம் என்பது இந்துப் பெயர் என்றும் ரகீம் என்பது இசுலாமியப் பெயர் என்றும் ராபர்ட் என்பது கிறித்துவப் பெயர் என்றும் தவறாகக் கருதுகின்றனர்.

Robert இந்தப் பெயர் அப்படியே அங்கிலத்திலும் உண்டு; பிரஞ்சிலும் உண்டு. ஆங்கிலேயர் ஆங்கில ஒலிப்புமுறைப்படி 'ராபர்ட்' என அழைப்பர். பிரஞ்சுகாரர் பிரஞ்சு ஒலிப்பு முறைப்படி ரொபேர் என அழைப்பர். எனவே இங்கே கிறித்துவம் இடம் பெற்றிலது; மொழியே இடம் பெற்றுள்ளது.

இந்து மதத்திற்குச் சமற்கிருதம் மொழியெனவும் கிறித்துவ மதத்திற்கு ஆங்கலம் மொழியெனவும் இசுலாம் மதத்திற்கு அரபி மொழியெனவும் தவறான கருத்து நிலவி வருகிறது. அந்தக் குட்டுப் புதுச்சேரியில் உடைபட்டுவிட்டது. ஏனெனில் இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் கிறித்தவர்கள் தம் பெயரை ஆங்கிலத்தில் வைத்துக் கொண்டனர். ஆனால் புதுச்சேரியில் உள்ள கிறித்தவர்கள் தம் பெயரைப் பிரஞ்சு மொழியில் அமைத்துக் கொண்டனர். இதனால் கிறித்துவ மதத்திற்கு என்று தனிமொழி இன்று என்பது தெளிவாகிறது. இதனை உணர்ந்தே கிறித்துவ மதத்தார் அந்தந்தப் பகுதியில் உள்ள மக்களின் மொழியிலேயே வழிபாடு நடத்தத் தொடங்கிவிட்டனர். முதன் முதலில் தெளிவு பெற்றவர் அவரே. எனினும் இன்னும் மக்கள் மொழியில் பெயர் அமைதலை அவரும் ஊக்குவித்திலர். கிறித்துவ மதத்தைப் போலவே இந்து மதமும் இசுலாம் மதமும் மதத்திற்கென்று தனிமொழி இன்றென்பதை உணர்ந்து மக்கள் பேசும் மொழியிலேயே வழிபாட்டு நிகழ்வுகளை நடத்த வேண்டும் என்ற தெளிவினை விரைவில் பெறும் என நம்புகிறோம். அப்பொழுது மக்கள் தம் பெயர்களும் அவரவர் மொழியிலேயே அமைந்திடும்.

கிறித்துவ மறை நூலான விவிலியத்தைத் தமிழில் மொழி பெயர்த்தவர்கள் Joseph என்ற பெயரை இக்கால் சிலர் வழங்குதல் போல 'ஜோசப்' எனப் பெயர்க்காமல், சூசை எனக்குறிப்பிட்டதும் Jesus என்ற பெயரை 'ஜீசஸ்' எனக் குறிப்பிடாமல் இயேசு எனக் குறிப்பிட்டதும் வடமொழி எழுத்துக்களைத் தமிழில் கலந்தெழுதக் கூடாது என்ற மரபினைக் காத்தற்கே ஆகும். கவிப் பேரரசன் கம்பனும் 'ரத்தாடகஷின்'

www.padippakam.com



என்ற வடமொழிப் பெயரைக் குருதிக்கண்ணன் என்றும் லக்ஷ்மண் என்ற பெயரை இலக்குவன் என்றும் 'ராம்' என்ற பெயரை முன்னொட்டும் பின்னொட்டும் சேர்த்து இராமன் என்றும் அமைத்ததெல்லாம் தமிழ் மரபு காப்பாற்றப் படல் வேண்டும் என்பதற்காகவே. உமறுப்புலவர் 'ஹஜ்' பயணத்தைக் குறிக்கக் 'கச்சு' என்ற சொல்லைப் பயன்படுத்தியதும் வடவெழுத்துக்களை நீக்கவே ஆகும். ராம், ரகீம், ராபர்ட் என்பன தமிழ்ப்பெயரும் ஆகா. தமிழர்க்குப் பெயரும் ஆகா. அன்பழகன் தமிழ்க் கிறித்துவனாகவும் இளங்கோவன் தமிழ் இந்துவாகவும் இறையரசன் தமிழ் இசுலாமியனாகவும் இருப்பர். மதம் என்பது உலகளாவிய பொதுக் கொள்கை. எனவே அன்பர் மதுரை மாறன் தமிழ் இலக்கணத்தைத் தொடர்ந்து படித்துத் தெளிவு பெற்றிட வேண்டுகிறோம். - இறைவிழியன்.

## தமிழ் நீச பாஷையா? நேச பாஷையா?

### அக்கினிகோத்திரம் இராமானுச தாத்தாச்சாரியார்

சுப்ரபாதத்தில் இன்னொரு 'லாஜிக்'கும் இருக்கிறது. அதிலும் தமிழ்தான் வெற்றி பெறுகிறது. திருப்பதி வெங்கடாஜலபதி நின்று கொண்டிருக்கிறார். அவரை எழுப்புவது சரியாக இருக்குமா? இங்கே திருவரங்கத்தில் அரங்கன் படுத்துக் கொண்டிருக்கிறார். இவரை எழுப்புவது சரியாக இருக்குமா? படுத்துக் கொண்டிருப்பவரை எழுப்பும் வேலையைத் தமிழில் செய்தார் தொண்டரடிப் பொடியாழ்வார். நின்று கொண்டிருப்பவரை எழுப்பும் வேலையை சமஸ்கிருதத்தில் செய்தார்கள். ஆனால் நாமோ logic இல்லாத சமஸ்கிருத வெங்கடேச சுப்ரபாதத்தைத் தினந்தோறும் காலையில் போட்டுக் கேட்கிறோம்.

ஆனால் மறுபடியும் நான் அழுத்திச் சொல்வேன். இதே பொருளை 600 ஆண்டுகள் முன்கூட்டியே சொன்ன தமிழைத் தள்ளி வைத்துவிட்டார்களே. இன்றும் கோயில்களில் தினசரி சேவா காலத்தில் தொண்டரடிப் பொடியாழ்வாரின் திருப்பள்ளியெழுச்சி ஒலிக்கிறது. ஆனாலும், சுப்ரபாதத்தைப்போலத் திருப்பள்ளியெழுச்சி எனத் தமிழ்ப் பெயரில் மாற்றி இனியாவது எவரேனும் அதற்கு நல்ல இசையமைத்து விடியற்காலையில் தமிழ் மணக்கச் செய்வார்களா?

சமஸ்கிருத கைதிகளாக இருக்கும் சிலபேர் தமிழை நீசபாஷை என ஒதுக்கித் தள்ளியிருக்கிறார்கள். தமிழ்தான் நமக்கு மட்டுமல்ல அரங்கனுக்கும் நேசபாஷை என்பதை இன்னொரு ஆழ்வாரின் வாழ்க்கை யிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

அவர் திருப்பாணாழ்வார் சோழ நாட்டிலே உறையூர் என்ற திருவூரில் பாணர் வம்சத்தில் பிறந்தவர். பாணர்கள் என்றால் 'பாண்' என்னும் இசைக்கருவியை வைத்துக்கொண்டு மன்னர்களைப் பாடி பரிசுப் பொருள்களை பெற்று ஜீவனம் நடத்துபவர்கள். ஆனால் நமது பாணரோ திருவரங்கத்து பெருமாளையே நினைத்துப் பாடிக் கொண்டிருந்தார். சுற்றிலும் காவேரி சூழ்ந்த திருவரங்கத்தில் இருக்கும் ரங்கநாதனை தனதுபாண் இசைக்கருவி மூலம் 'டிங்கு டிங்கு டிங் டிங்...' என இசைத்துக் கொண்டு பாடியபடி இருந்தார். ஆனால் இவரைப் பார்த்த உயர் ஜாதியினர்களோ...

www.padippakam.com



'நீ தாழ்ந்த சாதிப்பயல் நீ எப்படியடா திருவரங்கத்துக்குள் நுழைய முடியும். போடா' என துரத்தியடித்தார்கள். பாணரோ... நான் பெருமானைப் பாடித்தான் தீருவேன் என்று செந்தமிழில் ரங்கனை உருகி ராகமிசைத்துக் கொண்டிருந்தார்.

இவரது தமிழிசையை ரங்கனின் உயர்ஜாதி பக்தர்கள் காதில் போட்டுக் கொள்ளாமல் விரட்டியடிக்க காவேரி கரையிலேயே நின்று கொண்டிருந்த பாணர் வாழ்வில் ஒரு அதிசயம் நடந்தது. காவேரிக் கரையில் தனிமையில் நின்று அரங்கனை பாடிக்கொண்டிருந்த பாணர் முன்பு ஒரு வைதீகர் ஆச்சாரமான வைதீகர் நின்றார்.

எங்களை மன்னிப்பீர் பாணரே. உங்களை இதுநாள்வரை திருவ ரங்கத்துள் அனுமதிக்காமல் அரங்கனைத் தரிசிக்க விடாமல் பாவம் செய்தோம். உங்கள் தமிழை நாங்கள் மறுதலித்தோம். ஆனால் பகவான் அரங்கநாதர் உங்கள் தமிழுக்காகத் தவம் இருக்கிறார்.

உங்களது இனிய பாடல்களை அரங்கன் அவதானித்துக் கொண்டே இருக்கிறார். என்னை அழைத்து, 'நீ போய் நமக்கு அந்தரங்கரான பாண் பெருமானை உம்முடைய தோளிலே தூக்கிக் கொண்டு வா... அவரை ஒதுக்கி வைக்க நினைக்காதீர் உடனே செல்' என கேட்டுக் கொண்டார்.

வாருங்கள் என் தோளில் ஏறிக் கொள்ளுங்கள். உங்களைச் சுமந்து அரங்கனிடத்தில் இறக்கி விடுகிறேன்" என்று பாணரைப் பார்த்துப் பணிவுடன் சொன்னார் அரங்கன் அனுப்பிய லோகசாரங்கர். பாணர் அதாவது திருப்பாணாழ்வார் லோகசாரங்கர் தோளில் ஏறி... திருவரங்கத்தை அடைய அங்கே திருப்பாணாழ்வாரை பார்த்த அரங்கன். அவருக்கு காட்சி தந்து இப்போது என் அருகில் தமிழ் பாடுங் கள் பாணாழ்வாரே..." என்று கேட்கிறார்.

**இந்த காட்சியைப் பார்த்து அனுபவித்து அமலனாதிபிரான் எனப் பத்துப் பாசுரங்களைப் (927-936) பாடினார் திருப்பாணாழ்வார். இப்போது சொல்லுங்கள் தமிழ் நீச பாஷையா? இறைவனின் நேச பாஷையா?...**

நன்றி! நக்கீரன் - 13-8-2005 **இந்து மதம் எங்கே போகிறது?**

குறிப்பு : நற்றமிழன்பர்கள் உள்ளபடி அறிந்திட நக்கீரனில் வந்த கட்டுரை அப்படியே தரப்பட்டுள்ளது. **- ஆசிரியர்.**

## பாடல் படைத்திடுக

**வஞ்சி விருத்தம் - 7**

பாரெழு கடலெழு மலையெழுவாய்ச்
சீர்கெழும் இவ்வுல கேழுமெல்லாம்
ஆர்கெழு வயிற்றினில் அடக்கிநின்றங்
கோரெழுத் தோருரு வானவனே. (நாலா.பனு.1452)

1. ஒவ்வோரடியிலும் மூன்று சீர்கள் இருக்க வேண்டும்.
2. ஓரடியின் சீரமைப்பு முறையே : **கூவிளம்+விளம்+காய்**
3. இவ்வாறமைந்த நான்கடிகள் ஒரெதுகை பெற்றிருக்க வேண்டும்.

இவ்வாறமைந்த பாடல் ஒன்றை விரும்பிய பொருளில் இயற்றி, வரும் 30-9-05 க்குள் விடுக்க. **- புலவர் அரங்க. நடராசன்**

www.padippakam.com

நற்றமிழ்-திங்களிதழ்
NATRAMIZH-MONTHLY

பதிவு எண். புது.த.தி./2000/4265
Registration No. PONTAM / 2000 / 4265

அஞ்சல் உரிமம் : த.நா / அ.து.த 128 / 03-05. திங்கள் தோறும்
15 / 16ஆம் நாளில் நெல்லித்தோப்பு அஞ்சலகத்தில் சேர்க்கப்படுகிறது.
Postal registration : TN/PMG (CCR) 128/03-05. Posted
at NELLITHOPE POST OFFICE On 15th / 16th of Every Month.

**அச்சிட்ட நூல் அஞ்சல் - Printed Book Post**

**LICENSED TO POST WITHOUT PREPAYMENT UNDER WPP NO. SSP / PY / 83 / 03-05**







பெறுநர் :

N. MURALY
Dysse garden - 24, T.V,
7500 Holstebro,
Danmark.

## புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி

**112, காமாட்சியம்மன் கோவில் வீதி, புதுச்சேரி – 605 001.**

நானும் தமிழும் / திங்கள் தோறும் இரு கவிஞர்கள் நிகழ்ச்சி கீழ்க்கண்டவாறு நடைபெறும்.

| | | |
|---|---|---|
| 14.09.2005 | - | வள்ளுவம் – ப. மருதநாயகம் |
| 21.09.2005 | - | இருகவிஞர்கள் – துரை. மாலிறையன், இரா. நாகசுந்தரம் |
| 28.09.2005 | - | சங்க இலக்கியத்தில் இசை – அரிமளம் சு. பத்மநாபன் |
| 05.10.2005 | - | நானும் தமிழும் – மு. இறைவிழியன் |
| 12.10.2005 | - | இருகவிஞர்கள் – க. பஞ்சாங்கம், பாரதி வசந்தன் |
| 19.10.2005 | - | நூல்மதிப்பீடு – நா. செல்வராசு |
| 26.10.2005 | - | சங்க இலக்கியத்தில் இசை – அரிமளம் சு. பத்மநாபன் |

## நற்றமிழ்

| | | | |
|---|---|---|---|
| தனி இதழ்க் கட்டணம் | — | உரு | 6.00 |
| ஆண்டுக் கட்டணம் | — | உரு | 75.00 |
| வெளிநாட்டு ஆண்டுக் கட்டணம் | — | உரு | 300.00 |
| வாழ் நாள் கட்டணம் | — | உரு | 600.00 |

திரு. ந. இளம்பூரணன் அவர்கட்கு உரிமையான 17, முதல் தெரு, இராசய்யர் தோட்டம், புதுச்சேரி - 605 013. இல் உள்ள அகத்தியர் அச்சகத்தில் அச்சிடப்பட்டு, நற்றமிழ் உரிமையாளரும் ஆசிரியருமான புலவர் மு. இறைவிழியனாரால் 43, அங்காடித் தெரு, நெல்லித்தோப்பு, புதுச்சேரி - 605 005. என்கிற முகவரியிலிருந்து வெளியிடப்படுகிறது.
தொலைபேசி : (0413) 2203765

Printed by **N. Elampuranan,** Owner of the press and published by **M. Iraivizhiyan** on behalf of **M. Iraivizhiyan** and printed at AHATHYAR PRESS, 17, First Street, Rajaiyer Thottam, Pondicherry - 605 013. and published at 43, Market Street, Nellithope, Pondicherry - 605 005. Editor **M. Iraivizhiyan,** Telephone : (0413) 2203765